விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 155 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 09 திங்கட்கிழமை (23.05.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/= மட்டுமே



## 2024 வரை தேர்தல் இல்லை

03 ஆம் பக்கம் பார்க்க




## 21 ஆவது திருத்தம் இன்று அமைச்சரவைக்கு

15 ஆம் பக்கம் பார்க்க



## 40 ஆயிரம் மெ.தொன் டீசல் வந்தடைந்தது

15 ஆம் பக்கம் பார்க்க



## இந்தியாவின் உதவிப் பொருட்கள் வந்தடைந்தன

15 ஆம் பக்கம் பார்க்க

### யாழ்., கிளிநொச்சியில் சடலங்கள் மீட்பு

(கரணவாய்)

தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞன் ஒருவரின் சடலம் நேற்று ஞாயிற்றுக் கிழமை அதிகாலை அவரின் வீட்டில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் ▷15

### அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாட்டால்

# ஜூன் மாதம் நாட்டில் கலவரம் வெடிக்கும்!

வாழ்த்துகின்றோம்

இன்று ஆரம்பமாகும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற அனைத்து மாணவர்களும் சிறந்த பெறுபேறுகளைப் பெற வாழ்த்துகின்றோம்.
கல்விப் பிரிவு, வலம்புரி



## பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க எச்சரிக்கை

*(கொழும்பு)*

*ஜூன் மாத நடுப்பகுதியில் பொருளாதார நெருக்கடியைத் தாங்கிக்கொள்ள முடியாது, பாரிய மக்கள் கலவரம் ஒன்று வெடிக்கப்போவதாகப் பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.* *(15ஆம் பக்கம் பார்க்க)*

## இலங்கையில் இடம்பெறும் போராட்டங்கள் ஏனைய நாடுகளுக்கும் பரவலாம்

### சர்வதேச நாணய நிதியம்



(கொழும்பு)

இலங்கையில் வறிய மக்களுக்கான அரசாங்க உதவிகள் சரியான முறையில் முன்னெடுக்கப்படாவிட்டால் அங்கு இடம்பெறும் போராட்டங்கள் மற்ற நாடுகளிலும் பரவலாம் என சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) தலைவர் கடுமையாக எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் அவ் அமைப்பின் தலைவர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா கூறுகையில்,

உலகெங்கிலும் உள்ள மக்கள் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் போராடி வருகின்றனர். பல அரசாங்கங்கள் சில உதவி ▷15

### செலவுகளைக் குறைப்பதற்காக

## அலரிமாளிகையில் குடியேறப் போவதில்லை

### பிரதமர் ரணில் தீர்மானம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அலரிமாளிகையில் குடியேறுவதில்லை எனத் தீர்மானித்துள்ளார்.

பிரதமர் செயலகத்தின் செலவுகளை 50 வீதமாக குறைக்குமாறு பிரதமர் ▷15

### எரிபொருள் கிடைக்காததால்

## எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளரின் வீட்டுக்கு தீ

(கொழும்பு)

அநுராதபுரம், இபலோகம பகுதியில் அமைந்துள்ள லங்கா I.O.C எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளரின் வீடு நேற்றுமுன்தினம் இரவு ஒரு குழுவினரால் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் அவரது எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காக பெருமளவான மக்கள் வந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. ▷15

## யாழில் விபத்து; இருவர் கவலைக்கிடம்



▷15

## பாதுகாப்பு அமைச்சு பதவியில் இருந்து விலக

### ஜனாதிபதி கோட்டா முடிவு



(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியை அடுத்து பாதுகாப்பு அமைச்சு பதவியில் இருந்து விலக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இணக்கம் வெளியிட்டுள்ளார்.

15 வருடங்களிற்கு மேல் பாதுகாப்பு விவகாரங்களை கையாண்ட ▷15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஓம் சக்தி
" வீரமாகாளி திருத்தாள் போற்றி"
" வீரமாகாளியை சரண்புகுந்தால் வீரசக்தி பெறலாம் "



## அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்

### மஹோற்சவ அறிவித்தல் - 2022

அம்பாளின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 19.06.2022 ஆம் திகதியன்று ஆரம்பமாகி 11,12,13/07/2022 ஆம் திகதிகளில் சப்பறம், தேர், தீர்த்தம் போன்ற உற்சவங்கள் நடைபெற இருப்பதால் இவ்வருட உற்சவமானது சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றின் TR 7170 வழக்கின் இறுதித் தீர்வையின் பிரகாரமும் குடியியல் மேன் முறையீட்டு மேல் நீதிமன்றின் REV 14/2021 கட்டளையின் பிரகாரமும் பின்வரும் உற்சவங்கள் எனது தலைமையில் நடை பெறும் என்றும் கீழ்க்குறிப்பிடப்படும் உற்சவ காலங்களில் ஆலய பெயரில் நிதி சேகரிக்கவோ அன்னதான நடவடிக்கைகளில் ஈடுபடவோ எவரும் அனுமதிக்கப்படவில்லை என்பதை பகிரங் கமாக தெரியப்படுத்துகின்றேன். கீழ்க் குறிப்பிடப்படும் உற்சவ உபய காரர்கள் என்னுடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரத்தைப் பெற் றுக் கொள்ளுமாறு அறியத் தருகின்றேன்.

| | |
|---|---|
| 01. கணபதி ஹோம உபயகாரர் | 06. தீர்த்தத் திருவிழா உபயகாரர் |
| 02. கொடியேற்ற உபயகாரர் | 07. பூங்காவனத் திருவிழா உபயகாரர் |
| 03. 2ஆம் திருவிழா உபயகாரர் | 08. தண்டிகை உபயகாரர் |
| 04. சப்பறத் திருவிழா உபயகாரர் | 09. பிராயச்சித்த உபயகாரர் |
| 05. தேர்த் திருவிழா உபயகாரர் | 10. வைரவர் சாந்தி உபயகாரர் |

இங்ஙனம்
சிவாச்சார்ய இளவரசு
சமாஸ்ரீ தேசமான்ஜ
சிவஸ்ரீ. சிவ. கமல்ராஜ் குருக்கள்
பிரதம குருவும் ஆதீனகர்த்தாவும்
வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்
நல்லூர் - யாழ்ப்பாணம்.

(C-4362)

" தெளிவே என் சிந்தனை "

## சிசேரியன் அறுவை சிகிச்சைக்கு தேவையான தையல் நூலிற்கும் தட்டுப்பாடு

(கொழும்பு)

நாட்டில் உள்ள மருத்துவமனை களில் மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துகளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவு வதாக மருத்துவர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

சில மருத்துவமனைகளில் சிசேரியன் அறுவை சிகிச்சைக்கு தேவையான தையல் நூல் பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அந்த கூட்டமைப்பின் செயலாளர் மருத்துவர் ஜயருவான் பண்டார கூறியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித் துள்ளார்.

மருந்துகள் உட்பட பலவற்றை மருந்தகங்களில் கொள்வனவு செய்து வருமாறு நோயாளிகளுக்கு மருத்துவ மனைகள் அறிவிப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

நோயாளிகள் மற்றும் அன்பளிப் பாளர்களின் உதவிகளுடனேயே தற் போது நாட்டில் பல மருத்துவமனைகளில் சிகிச்சை வழங்கும் சேவைகளை முன் னெடுத்து வருவதாகவும் ஜயருவான் பண்டார கூறியுள்ளார். (4-7)

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின்

## தொழில்நுட்ப கோளாறு சீர் செய்யப்பட்டது

(கொழும்பு)

நுரைச்சோலை அனல்மின் நிலை யத்தில் ஏற்பட்ட தொழில் நுட்ப கோளாறு சீர்செய் யப்பட்டுள்ளதாக அறிவிக் கப்பட்டு ள்ளது.

இலங்கை மின் சார சபை இந்த அறிவிப்பை வெளி யிட்டுள்ளது.

இதற்கமைய, இன்று மாலைய ளவில் 260 மெகா வோட் மின்சாரம் தேசிய மின்கட்ட மைப்புடன் இணை க்கப்படும் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள் ளது. (4-7)

## அறிவித்தல்

யாழ்ப்பாணம் பாங்ஷோல் வீதி ஆதனவரி இலக்கம் 26இல் அமைந்துள்ள ஆதனம் சுப்ரமணியம் விக்னேஸ் வரன் ஆகிய எனது பெயரிலும் எனது சகோதரி ருக்மணிதேவி சிவயோகபதியின் பெயரிலும் உள்ளது.

இதற்குள் தங்கப்பன் மேரி யசிந்தா என்பவர் 2010 இல் அத்துமீறி குடியேற முற்பட்டபொழுது அவருக்கு எதிராக யாழ். மாவட்ட நீதிமன்றில் வழக்கு தொடுக்கப்பட்டது.

இந்த வழக்கு 2018.09.05 இல் எங்களுக்கு சார்பாக தீர்க்கப்பட்டது. இத் தீர்ப்பை எதிர்த்து அவரால் மேல் நீதிமன்றில் மேன் முறையீடு செய்யப்பட்டது. அந்த வழக்கும் எங்கள் சார்பாக 2021.03.24 இல் எங்களுக்கு சார்பாகத் தீர்க்கப்பட்டது.

இத்தீர்ப்பையும் எதிர்த்து எதிராளி கொழும்பு உயர்நீதி மன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

இவ்வழக்கு நிலுவையில் இருக்கும் பொழுது எதிராளி எங்களுடைய வளவை பகுதியளவில் போலியாகத் தயாரிக் கப்பட்ட ஆவணங்களுடன் விற்பனை செய்வதற்கு நடவ டிக்கை எடுப்பதாக அறியவந்துள்ளது.

நன்கு வரையறுக்கப்பட்ட எல்லைகளுடன் கூடிய இவ் ஆதனத்தை எவராவது வாங்க முற்பட்டால் அதன் பெறு பேற்றை அவர்களே சந்திக்க நேரிடும் என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

சுப்ரமணியம் விக்னேஸ்வரன்

வரைபு
திருமதி சரோஜினிதேவி இளங்கோவன்

(C-4363)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## கண்ணீர் அஞ்சலி

### இரத்தினகோபால் சுந்தரேஸ்வரி



அன்னார் கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் முன்னாள் பொருளாளர் அமரர் சபாரத்தினம் (ஓவசியர்) அவர்களின் அன்பு மகளும் முன்னாள் தலைவர் பாலாபரணத்தின் பாசமிகு சகோதரியும் ஆவார். அன்னாரின் குடும்பத்தவர் ஆலய முன்னேற்றத்திற்கு ஆயுள்நிர்வாக சபையில் இணைந்து அரும்பெரும் சேவை ஆற்றிய குடும்பத்தவர் ஆவர்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நிர்வாக சபை
கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில், கொக்குவில்

(11478)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது ஆலய முன்னாள் நிர்வாக சபை உறுப்பினர்

### அமரர் நாகராசா ஸ்ரீஸ்குமார்



பிறப்பு 19.02.1980
இறப்பு 09.04.2022

அவர்களின் திடீர் மறைவினையிட்டு நாம் மிகுந்த கவலையடைவதுடன் அன்னாரின் ஆத்மா அம்மை, அப்பன் திருவடியில் சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி

பரிபாலன சபை, தொண்டர் சபை
வட்டு. கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயம்.
கண்ணகையம்மன் ஆலயம் வட்டுக்கோட்டை.

## கண்ணீர் அஞ்சலி



நல்லூர்க் கோட்டக்கல்விப் பணிப்பாளர்

உயர்திரு

### F.X. அன்ரன்

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்கி, அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், பாடசாலைச் சமூகம்
யா/கலட்டி மெ.மி.த.க. பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நெருக்கடி குறித்து

# சர்வதேச நாடுகளுடன் பேச்சு

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

**(கொழும்பு)**

**நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலவரம் குறித்து சர்வதேச நாடுகளுடன் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**



சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதன்படி சர்வதேச நாடுகள் சாதகமான முறையில் பதிலளித்திருக்கின்றன என்றும் குறிப்பாக இந்தியாவே துரிதமாக உதவிகளை வழங்கியது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற நிதியுதவியே நாடு தொடர்ந்து இயங்குவதற்கு உறுதிசெய்தது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு, வெளிநாட்டு நாணயப் பற்றாக்குறை, ஆர்ப்பாட்டங்கள் காரணமாக சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வரமாட்டார்கள் என்றே கருதுவதாக கூறினார். (4)

# 50 ஆயிரம் டொலர்களுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

50,000 அமெரிக்க டொலர்களை வைத்திருந்த நபர் ஒருவர் நேற்று முன்தினம் மாலை வெலிக்கடை பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் குறித்த நபர் கைது செய்யப்பட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு 15, அளுத்மாவத்தையில் வசிக்கும் 36 வயதுடைய ஒருவரே சோதனையின் போது கைது செய்யப்பட்டதோடு அவரிடமிருந்து 50,000 டொலர்கள் கைப்பற்றப்பட்டன.

50,000 டொலர்களை எவ்வாறு பெற்றுக்கொண்டார் என்பதை நிரூபிக்கத் தவறியமைக்காக பணமோசடி சட்டத்தின் கீழ் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (4)

# 2024 ஆம் ஆண்டு வரை தேர்தல் நடைபெறாது

(கொழும்பு)

பொருளாதாரத்தை ஸ்திரபடுத்தும் வகையில் எதிர்வரும் 2024 ஆம் ஆண்டுவரை எவ்வித தேர்தலையும் நடத்தாமல் இருக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எனவே அடுத்த வருடம் முழுவதும் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் திட்டங்களை செயற்படுத்த முன்னுரிமை வழங்குவது குறித்து அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அதன் ஒரு பகுதியாக இந்தியா மற்றும் மேற்குலக நாடுகளுடன் பேச்சுவார்த்தை முன்னெடுக்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அங்கு விஜயம் மேற்கொள்வார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இலங்கையின் நெருக்கடிக்கான தீர்வை முன்னிறுத்திய பன்னாட்டு ஒத்துழைப்பு மையத்தை நிறுவுதல், கொழும்பில் சர்வதேச நன்கொடையாளர்கள் மாநாட்டை நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பாக அமெரிக்கா, இந்தியா மற்றும் ஜப்பான் உள்ளிட்ட நாடுகளுடனும் கலந்துரையாடலை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. (4)

# மின்தடை குறித்து புதிய அறிவிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் எதிர்வரும் 29 ஆம் திகதி மின்வெட்டு அமுல்படுத்தப்படாது என பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்னநாயக்க தெரிவித்தார்.

மேலும் இன்று A முதல் W வரையிலான வலையங்களில் நண்பகல் முதல் மாலை 6.30 வரையில் இரண்டு மணித்தியாலங்களும் 10 நிமிடங்களும் மின் விநியோகத்தடை அமுல்படுத்தப்படவுள்ளது.

க.பொ.த சாதாரண தர பரீட்சை இடம்பெறும் காலப்பகுதியில் மாலை 6.30 மணிக்கு பின்னர் மின்வெட்டு அமுல்படுத்தப்படாது என அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)

# சட்டம், ஒழுங்கை பாதுகாக்க தயார் நிலையில் இராணுவம்

## ஜனாதிபதி கோட்டா

(கொழும்பு)



சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாப்பதற்காக இராணுவம் தயார் நிலையில் இருப்பதை உறுதி செய்யும் வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீண்டும் வெளியிட்டுள்ளார்.


குறித்த வர்த்தமானி பொது பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் கீழ் (அத்தியாயம் 40) வெளியிடப்பட்டுள்ளது. பொது அமைதியை பேணுவதற்கு ஆயுதப்படைகளை தயார் நிலையில் வைத்திருக்கும் வகையில் ஜனாதிபதி குறித்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார். (4)

# கொழும்பில் எரிபொருள் இன்மையால் வீதியை மறித்து போராட்டங்கள்

(கொழும்பு)

கொழும்பின் பல்வேறு பகுதிகளில் நேற்று எரிபொருள் இன்மையால் பொதுமக்கள் வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

எரிபொருள் இன்மையால் நாட்டின் பல்வேறு பகுதிகளில் பொதுமக்கள் வீதியை மறித்து தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தினை மேற்கொண்டு வருகின்றனர்.



அந்தவகையில் நேற்று கொழும்பு 14 - ஸ்ரீமா பண்டாரநாயக்க வீதியில் நீண்ட நேரம் காத்திருந்தும் எரிபொருள் இன்மையால் பொதுமக்கள் வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

எரிபொருள் இன்மையால் கொழும்பு - கொச்சிக்கடை பகுதியிலும் பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (4)

## நெருக்கடிக்கு காரணமானவர்களை கண்டறிய

# பாராளுமன்ற தெரிவுக்குழுவை முன்மொழியவுள்ளார் பிரதமர்

(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு காரணமான நபர்களைக் கண்டறிவதற்கான பாராளுமன்றத் தெரிவுக் குழுவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்மொழியவுள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக அத்தியாவசிய உணவு, மருந்துகள், எரிபொருள், எரிவாயு மற்றும் அந்நியச் செலாவணி ஆகியவற்றிற்கு கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன், நாடு திவாலாகும் நிலைமையில் உள்ளது.

இது குறித்து விசாரிப்பதற்கு ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவை விட சர்வகட்சி தெரிவுக் குழுவை நியமிக்கும் முன் மொழிவு தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆங்கில ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

மக்களின் துன்பங்களுக்கு வழிவகுத்த பொருளாதார நிலைமைகள் தொடர்பிலான தெரிவுக்குழு கவனம் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமகள் மென்பந்து சுற்றுத்தொடர்

# திருமகள் லயன்ஸ் சம்பியன்




அரியாலை திருமகள் சன சமூக நிலையம் தனது 70 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் முன்னோடி நிகழ்வுகளின் வரிசையில் திருமகள் மென்பந்து சுற்றுத் தொடர் பருவ காலம் ஒன்றை (TSPL-01) அண்மையில் நடத்தியது.

தமது அங்கத்தவர்கள் 108, பேரை 6 அணிகளாக பிரித்து நடத்திய போட்டியில் 16 போட்டிகள் மிகவும் சிறப்பாக நடை பெற்றது.

இறுதிப் போட்டி அரியாலை திருமகள் றைனோஸ் மற்றும் அரியாலை திருமகள் லயன்ஸ் அணிகளுக்கிடையில் நடை பெற்று போட்டி மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது.

இறுதிவரை வெற்றிக் கிண்ணம் யார் வசம் செல்லும் என்ற நிலையில் இறுதிப் பந்துப் பரிமாற்றதின் இறுதி ப்பந்தில் அரியாலை திருமகள் லயன்ஸ் வசம் வெற்றிக்கிண்ணம் சென்றது. (4-6)

## கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணம் 2 ஆவது சுற்றுக்குள் பற்றீசியன்ஸ்




கே.சி.சி.சி. விளையாட்டுக் கழகம் வருடா வருடம் நடத்தும் 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரில் 3 ஆவது போட்டி கடந்த 7 ஆம் திகதி காலை நடைபெற்றது.

போட்டியில் பற்றீசி யன்ஸ் அணி, மானிப்பாய் பரீஸ் அணியை 8 ஓட்ட ங்களால் வெற்றி பெற்று 2 ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன்ஸ் அணி 19.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 98 ஓட்டங்களைப் பெற்றது.

டானியல்-10, கவஸ்கர்-39 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் பானுஜன்-05, கனிஸ்ரன்-02, டயாளன் தராஜ், நிதர்ஸன், டக்ஸன் தலா 01 விக்கெட்டினை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரீஸ் அணி 23.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 90 ஓட்டங்களைப் பெற்றது.

நிதர்ஸன்-21, மிதுர்ஸன்-20, சுபாஸ்-12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் டிலக்ஸன், றோபேட் தலா 03 விக்கெட்டுகளையும் பியற்றிக் -02 விக்கெட்டுகளையும் ரதீஸன், டனிசியஸ் தலா 01 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தரவரிசை (Rating) பட்டியலுக்கு பற்றீசியன்ஸ் அணி 5.06 புள்ளிகளையும், மானிப்பாய் பரீஸ் அணி 1.90 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டனர். (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2622

### சாக்ஷி

தும்மல் வருதுன்னு கண்ண மூடி தும்மிட்டு பாத்தா, கரண்டு போயிருச்சு...



நான் எனக்குதான் கண்ணு போயிருச்சோன்னு பயந்துட்டேன்...

### சியாந்

தெரியாது என்பதை தைரியமாக ஒப்புக்கொள்ளுங்கள் அதேநேரம் தெரியாததை தெரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள்...!



### பவிதன்

ஆத்தா, நம்ம ஊருக்கு அமீர்கான் வந்துருக்காரு



ராசா... அது அமீர்கான் இல்லய்யா... ஓமிக்ரோன்...

### வைஷ்ணவி

மரணத்தை விடக் கொடியது உயிராய் நேசித்தவர்களின் நிராகரிப்பும்.. அலட்சியமும்.. தவறான புரிதலும்!!!



### நிதர்ஷனா

ஒரு கதவு மூடப்படும் போது மற்றொரு கதவு திறக்கப்படும் நாம் மூடப்பட்ட கதவையே பார்த்துக்கொண்டு திறக்கப்படும் கதவைத் தவறவிடுகிறோம் -ஷெலன் கெல்லர்



### விதுர்விகா

அடுத்தவர்களின் விமர்சனங்களுக்கு செவிகொடுத்தால் நம்முடைய வாழ்க்கையை வாழ முடியாமல் போய்விடும்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா, சீனாவிடம் இருந்து மேலும் ஒரு பில்லியன் டொலர்

(கொழும்பு)

**இந்தியா மற்றும் சீனாவிடம் இருந்து புதிய கடன்களை பெற்றுக்கொள்வதற்கான பேச்சுவார்த்தைகளை இலங்கை ஆரம்பிக்கவுள்ளது.**

இந்த ஆண்டு முழுவதும் எரிபொருள் கொள்வனவுக்காக ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை திரட்டும் நோக்கத்துடன் இந்த பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக திறைசேரியின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போதையஎரிபொருள் விநியோகம் முடிந்த பின்னரும் பெற்றோல் மற்றும் டீசல் விநியோகத்தை தொடர்ந்தும் பராமரிப்பதை உறுதி செய்வதற்காக இந்த இரு நாடுகளிடமிருந்தும் தலா 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை பெற முயற்சிப்பதாக அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.எரிபொருள் கொள்வனவுக்காக இந்தியாவிடமிருந்து பெற்ற டொலர்களில் 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் மட்டுமே மீதமு ள்ள நிலையில் இந்த பேச்சுவார்த்தைஆரம்பிக்கப்படவுள்ளது.(4)

## யானை தாக்குதலில் ஒருவர் உயிரிழப்பு

(ஏறாவூர்)

மட்டு கொக்கட்டிச்சோலை - பன்சேனை அடைச்சல் குளத்துக்கு அருகில் யானை தாக்குதலில் ஆண் ஒருவர் உயிரிழந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக கொக்கட்டிச்சோலை பொலிஸார் தெரிவித்தனர்.பன்சேனை அடைச்சல் பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய வடிவேல் குணராசா என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொட ர்பான மேலதிக விசாரணை களை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4)

## அவுஸ்திரேலிய பாராளுமன்றத்திற்கு தெரிவான இலங்கை பெண்கள்



(சிட்னி)

அவுஸ்திரேலியாவின் வரலாற்றில் முதல் முறையாக இலங்கை வசம்சாவழியைச் சேர்ந்த இரண்டு பெண்கள் அந்நாட்டு சமஷ்டி பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தொழிற்கட்சியின் சார்பில் விக்டோரியா மாநிலம் மெல்பேர்னின் Higgins தொகுதியில் போட்டியிட்ட இலங்கை வம்சா வழியைச்சேர்ந்த மருத்துவரான மிச்சேல் ஆனந்த ராஜா வெற்றி பெற்றுள்ளார். அவர் 56.1 வீத வாக்குகளைப் பெற்றுள்ளார். அதாவது 30 ஆயிரத்து 46 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

அதேவேளை அவுஸ்திரேலியா சமஷ்டி பொதுத் தேர்தலில் விக்டோரிய மாநிலத்தில் வசிக்கும் மேலும் மூன்று இலங்கை யர்கள் போட்டியிட்டனர்.இவர்களில் தொழிற் கட்சியின் சார்பில் ஹொல்ட் தொகுதியில் போட்டியிட்ட கேசன்ட்ரா பெர்னாண்டோ வெற்றி பெற்றுள்ளார்.

இவர் லிபரல் கட்சியின் சார்பில் போட்டியிட்ட ராஞ்ச் பெரேராவை எதிர்த்து போட் டியிட்டார். 57.5 வீதம் என்ற அடிப்படையில், கேசன்ட்ரா பெர்னாண்டோ 40 ஆயிரத்து 187 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

அதேவேளை விக்டோரியா மாநிலத்தில் லிபரல் கட்சியின் சார்பில் போட்டியிட்ட இலங்கையரான விரோஷ் பெரேரா 17 ஆயிரத்து 385 வாக்குகளை பெற்று தோல்வியடைந்தார்.(4)

## கோட்டாவுக்கு எதிரான வழக்கு ஜூன் 20 இல் தீர்ப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவிற்கு எதிரான நெதர்லா ந்தின் ஹேக் நகரில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு விசாரணையின் தீர்ப்பு எதிர் வரும் ஜூன் 20 ஆம் திகதி அறிவிக்கப் படவுள்ளதாக தெரிவிக் கப் பட்டுள்ளது.

தென்னிலங்கை ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சண் டே லீடர் பத்திரிக்கையின் ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க படுகொலை செய் யப்பட்டமை தொடர்பில் அவரது மகள் அஹிம்சா விக்ரமதுங்க வினால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் தற்போது சுவிஸில் வசிக்கும் குற்றப் புல னாய்வுப் பிரிவின் முன்னாள் பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த சில்வா சாட்சியமளித்துள்ளதாக அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)




# இராசிபலன்

23.05.2022
வைகாசி 09, திங்கட்கிழமை
அட்டமி பிற்பகல் 4.48 மணிவரை

சதயம் பின்னிரவு 3.04 மணிவரை
சுபநேரம் 11.52-1.22 மணிவரை
இராகுகாலம் 7.22-8.52 மணிவரை

சந்திராஷ்டமம் - பூசம்

வளவன்

**மேஷம்**
எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**ரிஷபம்**
தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்,செய்தொழில் மேன்மையுண்டு, வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள்.

**மிதுனம்**
எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது, வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பயணங்கள் கைகூடும்.

**கடகம்**
மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்வது நல்லது,ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும், எடுத்த காரியங்களில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம்.

**சிம்மம்**
சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், கனவு பலிதமுண்டு, மனதில் நினைத்த புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி**
கூட்டு முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளில் முன்னேற்றம் காணும் நாள், உடல் நலனில் முன்னேற்றமுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**துலாம்**
தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், பிள்ளைகளின் நலனில் அக்கறை கூடும்.

**விருச்சிகம்**
வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும் நாள்.

**தனுசு**
குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில சம்பவங்கள் இடம் பெறலாம், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு.

**மகரம்**
காணாமல் போன பொருளொன்று மீண்டும் கிடைக்கும் வாய்ப்புண்டு, கல்யாணக் கனவுகள் நனவாகலாம், தேகநலனில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கும்பம்**
ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள்ள, உடல் நலனில் கவனம் தேவை, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**மீனம்**
உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

ஒருவருக்கு உள்ள நல்ல குணமே சிறந்த செல்வமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்முறைக் கும்பல்களிடையே மோதல்

## ஒருவர் படுகாயம், ஐவர் கைது

(யாழ்ப்பாணம்)

வன்முறைக் கும்பல் ஒன்றைச் சேர்ந்தவர் மீது வாள் வெட்டுத் தாக்குதல் நடத்திய கும்பலைச் சேர்ந்த 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரே இந்தக் கைது நடவடிக்கையை நேற்று முன்தினம் முன்னெடுத்தனர். கடந்த 17ஆம் திகதி மாலை சண்டிலிப்பாய் தொட்டிலடிச் சந்தியில் இந்த வாள் வெட்டுச் சம்பவம் இடம்பெற்றது.


சம்பவத்தில் அளவெட்டியைச் சேர்ந்த ஒருவர் தலையில் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

3 மோட்டார் சைக்கிள்களில் வந்த 6 பேரே இந்தத் தாக்குதலை மேற்கொண்டுவிட்டுத் தப்பித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் கீழான மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதனடிப்படையில் கட்டைக்காடு பகுதியைச் சேர்ந்த இருவர், தெல்லிப்பழையைச் சேர்ந்த இருவர் மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவர் என ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் பயன்படுத்திய இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர்கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் வடமராட்சி மற்றும் யாழ்ப்பாணத்தில் திருட்டு மற்றும் கொள்ளையிடப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (4-6-33)



யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திற்கு அண்மையில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவிடம் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினரால் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டது. (படம்:-ரவிசாந்)



யா/கரவெட்டி கிழக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை பரிசளிப்பு விழா கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (படம்:-மகாலிங்கம்)

# யாழ்.ஸ்ரான்லி வீதியிலுள்ள வர்த்தக நிலையம் தீக்கிரையானது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள விற்பனை நிலையம் ஒன்று நேற்று அதிகாலை தீப்பற்றி எரிந்து முற்றாக சேதமடைந்தது.

நேற்று அதிகாலை 2.30 மணிளவில் விற்பனை நிலையத்தில் திடீரென ஏற்பட்ட தீ, கடை முழுவதும் பரவி முழுமையான சேதத்தை ஏற்படுத்தியது. தீப்பரவலை கட்டுப்படுத்துவதற்காக யாழ்.மாநகர சபை தீயணைப்பு படை முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், அது பயன் அளிக்காத நிலையில் கடை முற்றாக எரிந்துள்ளது.



விற்பனை நிலையம் தீப்பற்றி எரிந்தமை தொடர்பில் மேலதிக தகவல்கள் எதுவும் வெளியாகாத நிலையில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-6-18-33)

# செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து கதிர்காம பாதயாத்திரை

## 3 ஆம் திகதியிலிருந்து ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

2022 ஆம் ஆண்டுக்கான கதிர்காம பாதயாத்திரை நிகழ் வானது எதிர்வரும் 03.06.2022 அன்று தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் இருந்து பக்தி பூர்வமாக ஆரம்பமாகும்.

இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் தவிர்ந்த யாவரும் பங்குகொள்ள முடியும்.

இப் பாதயாத்திரையில் பங்குபற்றுபவர்கள் தமது தேசிய அடையாள அட்டை, கொவிட் 19 தடுப்பூசி அட்டை என்பவற்றினை உடன் வைத்திருத்தல் வேண்டும்.

மேலும் புகைத்தல், மது பானம் உபயோகித்தல் கலாசாரத்திற்கு புறம்பான ஆடை அணிதல் என்பன முற்றாகத்தடை செய்யப்பட்டுள்ளது. (4-6)



சாவகச்சேரி-தென்னகத்தாரகை விளையாட்டுக் கழகத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு நேற்று முன்தினம் சனிக்கிழமை மாபெரும் இரத்ததான முகாம் இடம்பெற்றது. (படம்:-சுபேசன்)

# திருட்டில் ஈடுபட்டவர் கைது

(கரணவாய்)

பருத்தித்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு அருகாமையில் கடந்த வெள்ளிக்கிழமை துவிச்சக்கர வண்டியும் தொலைபேசியும் களவாடப்பட்டன.

இது தொடர்பில் நெல்லியடிப் பொலிஸாருக்குத் தெரிவித்த நிலையில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய புலனாய்வுத் துறையினரின் தீவிர விசாரணையில் குறித்த நபரைக் கைது செய்து மேலதிக விசாரணைகளுக்காக பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (4-6-60)

# துவிச்சக்கரவண்டி திருட்டு

(கரணவாய்)

நெல்லியடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கரணவாய் இரும்பு மதவடி பகுதியில், வீதியில் சென்று கொண்டிருந்த இளைஞனுடைய துவிச்சக்கர வண்டியினை இனந்தெரியாத நபர்கள் பறித்துச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் குறித்த இளைஞனால் நெல்லியடி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. இது தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (4-6-60)

## விழிப்புணர்வு நடவடிக்கையாக

# ஒரு கிலோ நாட்டரிசி யாழில் ஒரு ரூபாய்க்கு விற்பனை




(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா சுமித்ரயோ யாழ். கிளை தொண்டர்களால் நேற்று முன்தினம் ஒரு கிலோ நம்பர் 1 நாட்டரிசி 1 ரூபாவிற்கு வழங்கப்பட்டது. மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தற்கால பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்கும் மக்களுக்கு மன ரீதியான ஆறுதல் தேவை என்பதை உணர்த்தும் முகமாக இவ் விழிப்புணர்வு நடவடிக்கையை யாழ். முத்திரைச் சந்தியை அண்மித்த கல்வியங்காடு சட்டநாதர் கோவிலடியில் முன்னெடுத்தனர். (4-6-33)

# முகமாலையில் விபத்து

(கரணவாய்)

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முகமாலைப் பகுதியில் தனியார் பேருந்தும் டொல்பின் வாகனமும் விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தானது நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. இவ் விபத்துத் தொடர்பில் பளைப் பொலிஸார் மேலதிக விசாரனைகளை முன்னெடுத்துள்ளனர். (4-6-60)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகை அச்சுறுச்சுத்தும் குரங்கம்மை!

# தயார் நிலையில் இலங்கை



(கொழும்பு)

**குரங்கம்மை நோய் உலக நாடுகளை அச்சுறுத்தி வரும் நிலையில் இந் நோய் தொடர்பில் பரிசோதனை மேற்கொள்வதற்கு இலங்கையும் தயார் நிலையில் உள்ளது.**

தற்போது உலக நாடுகள் பலவற்றில் குரங்கம்மை நோய் பரவல் அடைந்துள்ளதன் காரணமாக அச்சுறுத்தல் நிலை ஏற்பட்டுள்ளது.


மத்திய மற்றும் மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் இந்தக் காய்ச்சல் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் உள்ள நோயெதிர்ப்பு மற்றும் உயிரணு உயிரியல் நிறுவகத்தில், பல நாடுகளில் பரவி வரும் இந்த குரங்கம்மை நோய்க்கான பரிசோதனைகளை மேற்கொள்ள வசதிகள் உள்ளதாக மருத்துவர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வாரத்தில் பரிசோதனைக்கு தேவையான ரசாயனங்கள் கிடைக் கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (4)

# பசிலின் விருப்பத்திற்கமையவே தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன

## பேராசிரியர் திஸ்ஸ சுட்டிக்காட்டு



(கொழும்பு)

பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷவின் விருப்பத்திற்கமையவே அரசாங்கம் முக்கிய தீர்மானங்களை முன்னெடுக்கிறது என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் பேராசியர் திஸ்ஸ விதாரன தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாட்டில் பொருளாதார நெருக்கடியும், அரசியல் நெருக்கடியும் தீவிரமடைவதற்கு முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ பொறுப்புக்கூற வேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக்கருத்தும் கிடையாது.

முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் தன்னிச்சையான தீர்மானங்களின் காரணமாக அரசியல் நெருக்கடியும் தீவிரமடைந்தது.

இரட்டை குடியுரிமையுடையவர் அரசியலில் செல்வாக்கு செலுத்த அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தில் வழங்கப்பட்டுள்ள வரப்பிரசாதம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்பது எமது பிரதான கோரிக்கையாக உள்ளதுடன், மக்களின் பிரதான எதிர்பார்ப்பாகவும் உள்ளது.

21 ஆவது திருத்தத்தில் நாட்டு மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேற்றப்படாவிடின் நாட்டில் மீண்டும் அரசியல் நெருக்கடி தீவிரமடையும் என்பதைதெளிவாக குறிப்பிட்டுள்ளோம்.(4)

# கடன் மீள் செலுத்துகை ஆற்றல் 'டி' நிலைக்கு தரமிறக்கம்

(கொழும்பு)

சர்வதேச பிணையங்களுக்கான கொடுப்பனவைச் செய்யத் தவறியமையால் ஃபிட்ச் ரேட்டிங் சர்வதேச தரப்படுத்தல் நிறுவனம் இலங்கையைக் கடன்களை மீளச்செலுத்த முடியாத 'டி' நிலைக்குத் தரமிறக்கியுள்ளது.

வெளிநாட்டுக்கடன் மீள் செலுத்துகையை இடைநிறுத்துவதற்கான அறிவிப்பு கடந்த மாதம் 12 ஆம் திகதி வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து ஃபிட்ச் ரேட்டிங் நிறுவனம் இலங்கையை 'சி' நிலைக்குத் தரமிறக்கியிருந்தது.

இந்நிலையில் தற்போது நாட்டை 'சி' நிலையிலிருந்து 'டி' நிலைக்குத் தரமிறக்கியுள்ள ஃபிட்ச் ரேட்டிங் நிறுவனம், குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் வெளிநாட்டு கொடுப்பனவு மீளச் செலுத்தப்படாமையே அதற்குக் காரணம் என்றும் விளக்கமளித்துள்ளது. (4)


# மே 9 வன்முறை 1500 பேர் கைது

## 677 பேர் விளக்கமறியலில்

(கொழும்பு)

மே 9 ஆம் திகதி இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக இதுவரை 1,500 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 677 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (4)




# கிருஷ்ணா அடைவு கடை
## பதிவு இல. J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2021 ஆம் ஆண்டு 30/06/2021 இற்கு முன்னர் அடகு வைத்த நகைகள் யாவற்றையும் 2022 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30 ஆம் திகதி (30/06/2022) இற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டி புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்க தவறின் (30/06/2022) ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

குறிப்பு:- 2021 ஆம் ஆண்டு 06 ஆம் மாதம் 30 ஆம் திகதிக்கு முற்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்.

உரிமையாளர்

இல.370, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
021 490 0311

இல.09 கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5046

# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: மகம் 1
கி.பா:20 சூரி 1 செவ் 7 இல்
உயரம்: 5' 8"
தகைமை/தொழில்: A/L (சொந்த வியாபாரம்)
எதிர்பார்ப்பு:சாதாரண படித்தபெண்
தொ.இ: B/12688

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம் : புனர்பூசம் 1
கி.பா: சூரி 3 செவ் 4 இல்
உயரம்: 5' 8"
தகைமை/தொழில்:MBBS Doctor
எதிர்பார்ப்பு: பல்கலைக்கழக பட்டம் பெற்ற அரச தொழில்
தொ.இ: B/12694

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 3
கி.பா: சூரி 9 செவ் 12 இல்
உயரம்:5' 6"
தகைமை/தொழில்:பாதுகாப்பு உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: அரச,தனியார் தொழில்
தொ.இ: B/12696

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்:திருவோணம் 1
கி.பா:14 சூரி 6 செவ் 5 இல்
உயரம்:5' 4'
தகைமை/தொழில்:Bcom(Hons) வங்கி முகாமையாளர் விவாகரத்தானவர்
எதிர்பார்ப்பு: நற்பண்புள்ள பெண்
தொ.இ: B/12698

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: கேட்டை 3
கி.பா: 50 ½ சூரி 10 செவ் 7 இல்
உயரம்: 5' 3"
தகைமை/தொழில்:A/L, HND,
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ:G/9821

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்:அத்தம் 1
கி.பா: சூரி, செவ் 5 இல்
உயரம்:5' 2"
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ:G/9837

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: மகம் 2
கி.பா: 38 ½ சூரி 6 செவ் 8 இல்
உயரம் : 5' 5"
தகைமை/தொழில்: BSc(Mora), MBA Executive Engineer
எதிர்பார்ப்பு: சைவபோசனம் விரும்பத்தக்கது Engineer, Accountant
தொ.இ:G/9839

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: மூலம் 1
கி.பா:39 ¼ சூரி 2 செவ் 6 இல்
உயரம்: 166 cm
தகைமை/தொழில்:HNDM தபாலதிபர்
எதிர்பார்ப்பு: உள்நாடு. வெளிநாடு
தொ.இ:G/9858


கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 52

# மனிதனின் சகிப்புத் தன்மையே பெரிய சாம்ராஜ்யங்களை உருவாக்கும்



தென் ஆபிரிக்க முன்னாள் அதிபர் திரு.நெல்சன் மண்டேலா கூறியது

நீண்ட நெடிய போராட்டத்திற்குப் பிறகு, நான் ஜனாதிபதியான பின் ஒருநாள் நான் எனது முதல் கட்ட பாதுகாப்புப் படையினருடன் நகரத்தில் உள்ள ஒரு உணவகத்துக்குச் சென்றிருந்தேன்.

அங்கு ஒரு உணவகத்தில் எல்லோரும் அவரவர் தமக்கு விரும்பிய உணவுக்கு ஆர்டர் கொடுத்து விட்டு அமர்ந்திருந்தோம். அப்போது எனக்கு எதிர் மேசையை கவனித்தேன்.

ஒருவர் தனியாக உணவுக்காகக் காத்திருந்தார்.. எனது படைவீரனை அனுப்பி, அவரை எம்முடன் வந்து ஒன்றாக உணவருந்தும் படி சொன்னேன். அவரும் தனது உணவுடன் எமது வட்டத்தில் வந்து அமர்ந்து கொண்டார்.. எல்லோரும் உணவருந்திய பின் அவரும் புறப்பட்டார்.

எனது படை வீரன் என்னிடம் சொன்னான்..... அந்த மனிதர் பார்ப்பதற்கு மிகவும் நோய் வாய்ப்பட்டவராகத் தெரிகிறார். அவர் உண்ணும் போது கைகள் மிகவும் நடுங்கின என்றான்..

நான் குறுக்கிட்டேன்..... அது அல்ல உண்மை. வீரனே....!!

உண்மை என்ன தெரியுமா......!!

நான் முன்னர் சிறையில் இருந்த போது, இந்த மனிதர்தான் எனக்கு சிறைக் காவலராக இருந்தார்.என்னை அடிக்கடி கொடுமைப்படுத்திக் கஷ்டப்படுத்தும் போதெல்லாம்....

நான் கூக்குரலிட்டு களைத்து இறுதியில் கொஞ்சம் நீர் அருந்தக் கேட்பேன்..

இதே அந்த மனிதர், அவ்வேளை என்னிடம் வந்து நேராக என் தலை மேல் சிறுநீர் கழித்துவிட்டுச் செல்வார்.

இப்போது அவர் என்னை இனம் கண்டு கொண்டார். நான் இப்போ தென் ஆபிரிக்க அதிபராக இருப்பதால், அவருக்கு பதிலடி கொடுப்பேன் என்று நடுக்கத்துடன் எதிர்பார்த்தார்....

ஆனால் இது எனது பழக்கமல்ல. இப்படிப்பட்ட குணம் எனதுமல்ல..

பழிக்குப் பழி வாங்கும் மனநிலை ஒரு போதும் ஒரு தேசத்தையோ, தனி மனிதரையோ தட்டியெழுப்பாது அழித்து விடும்.

அதே நேரம் சில விஷயங்களில் மனதின் சகிப்புத் தன்மை, பெரிய சாம்ராஜ்யங்களையே உருவாக்கும்...... என்றார் மண்டேலா..



**Kumarathasan Kumarasamy**

**அன்பு வாசகர்களே!**

முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

## அவுஸ்திரேலிய புதிய பிரதமராக அந்தனி அல்பனிஸ் தெரிவு



(கன்பரா)

அவுஸ்திரேலிய பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று தொழில் கட்சி சார்பில் போட்டியிட்ட அந்தனி அல்பனிஸ் புதிய பிரதமராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.ஒரு தசாப்த காலத்திற்கு பின்னர் தொழில் கட்சியில் இருந்து அவுஸ்திரேலியாவின் பிரதமராக ஒருவர் தெரிவாகியுள்ளார்.

இந்தத் தேர்தலில் லிபரல் கட்சி தலைவர் ஸ்கொட் மொரிசன் மற்றும் தொழில் கட்சி தலைவர் அந்தனி அல்பனிஸ் ஆகியோருக்கு இடையில் போட்டி நிலவியிருந்தது.அவுஸ்திரேலியாவில் ஆட்சி யைக் கைப்பற்றுவதற்கு மொத்த 151 உறுப்பினர் இடங்களில் 76 இனை கைப்பற்ற வேண்டியது அவசியமாகும்.

தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் அந்தனி அல்பனிஸ் தலைமையிலான தொழில் கட்சி 72 இடங்களைக் கைப்பற்றியதுடன், 55 இடங்களை ஸ்கொட் மொரிசன் கட்சி பெற்றுக்கொண்டது. 15 இடங்களை சுயாதீன மற்றும் ஏனைய கட்சிகள் கைப்பற்றியுள்ளன. ஆனால் அவரது கட்சிக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை கிடைக்குமா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

இந்நிலையில் காலநிலை கொள்கையில் பெரிய மாற்றத்துடன் நாட்டை ஒரு புதிய திசையில் கொண்டு செல்வதாக புதிய பிரதமர் உறுதி மொழி வழங்கியுள்ளார். (4)

## குரங்க



குறித்த தகவலை பிரித்தானிய செய்தி நிறுவனம் ஒன்று வெளியிட்டுள்ளது.


கென்னத் அலிபெக் என்றும் அழைக்கப்படும் கனாட் அலிபெகோவ், 1991 ஆம் ஆண்டு சோவியத் வீழ்ச்சியடையும் வரை சோவியத் ஒன்றியத்தின் உயிரி ஆயுத நிபுணராக இருந்தவர். பின்னர்,

## கனடாவி

(ஒட்டோவா)

கனடாவில் ஏற்பட்ட காலநிலை மாற்றம் காரணமாக 4 பேர் பலியாகியுள்ளதுடன், பலர் காயமடை

## உலக செஸ் சம்பியனுக்கு உளவாளி பட்டம் குத்திய ரஷ்யா



(மொஸ்கோ)

உக்ரைன் மீதான ரஷ்யப் படையெடுப்பு 3 மாதங்களாக நடைபெற்று வருகிறது. இதையடுத்து ரஷ்யாவிற்கு உலக நாடுகள் கண்டனங்களை தெரிவித்து வருகின்றனர்.

மேலும் அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகள் ரஷ்யா மீது பொருளாதார தடையை விதித்துள்ளன.

இதற்கிடையே ரஷ்யாவின் செயற்பாடுகளை அந்நாட்டைச் சேர்ந்த முன்னாள் உலக செஸ் சம்பியன் கேரி கேஸ்பரோவ், முன்னாள் எண்ணெய் அதிபர் மிகெயில் கோதோர்வ்ஸ்கி ஆகியோர் தொடர்ந்து விமர்சித்து வருகின்றனர்.

இதையடுத்து ரஷ்ய நீதித்துறை அமைச்சகம், அவர்களை, 'வெளிநாட்டு உளவாளிகள்' என்ற பட்டியலில் சேர்த்துள்ளது. (4)

## 12 — உ

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ...ம்மையை ஆயுதமாக்கிய ரஷ்யா!

## முன்னாள் சோவியத் விஞ்ஞானி பரபரப்புத் தகவல்

**(மொஸ்கோ)**

**1990 ஆம் ஆண்டுகளில் குரங்கம்மை வைரஸை ரஷ்யா ஆயுதமாக பயன்படுத்தும் ஒரு திட்டத்தை வைத்திருந்ததாகவும் அதனையே தற்போது மேற்கத்தேய நாடுகளுக்கு எதிராக உயிரியல் ஆயுதமாக பயன்படுத்தியுள்ளதாக முன்னாள் சோவியத் விஞ்ஞானி கனாட் அலிபெகோவ் தெரிவித்தார்.**

அவர் ரஷ்யாவில் இருந்து அமெரிக்காவிற்குச் சென்றார்.

சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட 1998 ஆம் ஆண்டு அமெரிக்க இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதப் பரவல் தடை திட்டத்திற்கு (CBWNP) அளித்த நேர்காணலில், அலிபெகோவ், சோவியத் நாட்டில் வைரஸ்களை ஆயுதங்களாகப் பயன்படுத்துவதற்கான திட்டம் இருப்பதாகக் கூறியுள்ளார்.

இந்நிலையில், ரஷ்யா அதன் பழைய திட்டத்தை இப்போது மேற்கத்தேய நாடுகளுக்கு எதிராக பயன்படுத்த தொடங்கியிருக்கலாம் என்ற கோணத்தில் இப்போது அவர் பரபரப்பு தகவலை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், மனித பெரியம்மைக்கு (Smallpox) பதிலாக என்ன வைரஸ்கள் பயன்படுத்தப்படலாம் என்பதை தீர்மானிக்க ஒரு சிறப்பு திட்டத்தை நாங்கள் உருவாக்கினோம். பெரியம்மைக்கான மாதிரியாக தடுப்பூசி வைரஸ், mousepox வைரஸ், rabbitpox வைரஸ் மற்றும் குரங்கம்மை (Monkeypox) வைரஸ் ஆகியவற்றை நாங்கள் சோதித்தோம்.

சோவியத் ஒன்றியத்தின் முடிவிற்குப் பிறகு, ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சகம் எதிர்கால உயிரியல் ஆயுதங்களை உருவாக்க குரங்கம்மை வைரஸை தொடர்ந்து பயன்படுத்துவதை திட்டமாக வைத்திருந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

அதே ஆண்டு, அவர் யுனைடெட் ஸ்டேட்ஸ் காங்கிரஸின் விசாரணைக்கு முன் கொண்டுவரப்பட்டார், அங்கு அவர் "ரஷ்யாவின் உயிரியல் ஆயுதங்கள் திட்டம் முழுமையாக அகற்றப்படவில்லை என்று உறுதியாக நம்புவதாக" தெரிவித்தார். (4)

# ...வில் கடும் புயல்; 4 பேர் பலி

...ந்துள்ளதாக அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

கனடாவின் கிழக்கு மாகாணங்களான ஒன்டாரியோ மற்றும் கியூபெக் மாகாணங்களில் நேற்று முன்தினம் கடுமையான புயலுடன், இடி மின்னலோடு பலத்த மழையும் பெய்தது.

இதன் காரணமாக பல்வேறு பகுதிகளில் மரங்கள் மற்றும் மின் கம்பங்கள் விழுந்தன.

இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டதுடன், சுமார் 9 இலட்சம் வீடுகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு இருளில் மூழ்கியது.

புயல், மழை காரணமாக 4 பேர் பலியாகினர். பலர் காயமடைந்துள்ளனர். பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகள் நடைபெறுகின்றன. (4)

# 12 நாடுகளுக்கு பரவிய குரங்கம்மை

## உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

(ஜெனிவா)

மொத்தம் 12 நாடுகளில் 80 பேர் குரங்கம்மை நோயினால் பாதிக்கப்பட்டு இருப்பது உறுதி படுத்தப்பட்டுள்ளது.

ஆபிரிக்காவின் தொலைதூர மத்திய மற்றும் மேற்குப் பகுதிகளில் பொதுவாக காணபடும் இந்த குரங்கம்மை நோய்கள் தற்போது பிரித்தானியா, கனடா, அவுஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் பரவத் தொடங்கியுள்ளது.

இதுவரை பிரித்தானியாவில் மட்டும் 20 நபர்கள் வரை குரங்கம்மை நோயினால் பாதிக்கப்பட்டு இருந்த நிலையில், தற்போது 12 நாடுகளைச் சேர்ந்த 80 பேர் இந்த நோயினால் பாதிக்கப்பட்டு இருப்பதாக தகவல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக உலக சுகாதார அமைப்பு அளித்துள்ள தகவலில், கூடுதலாக 50 பேர் இந்த குரங்கம்மை நோயினால் பாதிக்கப்பட்டு இருப்பதாக சந்தேகிப்பதால் அது தொடர்பான கண்காணிப்பை நடத்தி வருவதாகவும், பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்க அதிக வாய்ப்பு இருப்பதாகவும் எச்சரித்துள்ளது.

மேலும் ஐரோப்பிய பொது சுகாதார அமைப்பு வெளியிட்ட தகவலில், இந்த குரங்கம்மை நோயானது, பிரித்தானியா, ஸ்பெயின், போரத்துக்கல், ஜேர்மனி, பெல்ஜியம், பிரான்ஸ், நெதர்லாந்து, இத்தாலி, கனடா, அமெரிக்கா மற்றும் சுவீடன் ஆகிய நாடுகளில் நோய் பரவி இருப்பது உறுதியாகியுள்ளது என தெரிவித்துள்ளது.

பொதுவாக அவ்வளவு எளிதாக யாருக்கும் பரவாத இந்த அரிதான வைரஸ் தொற்று நோய், பெரும்பாலான மக்களிடம் மிதமான அறிகுறிகளுடன் தோன்றி சில வார காலங்களில் குணமடைந்து விடுவதாக பிரித்தானிய சுகாதார சேவை மையம் தெரிவித்துள்ளது.

இந்த குரங்கம்மை நோய்களுக்கு குறிப்பிடத்தக்க எந்த தடுப்பூசியும் இல்லாத நிலையில், பெரியம்மை நோய்க்கான தடுப்பூசிகள் 85 சதவிகிதம் வரை பயனளிப்பதாக தெரியவந்துள்ளது. (4)

# 3 ஹெலிகொப்டர்களை இழுத்து ரஷ்யர் உலக சாதனை



(மொஸ்கோ)

ரஷ்யர் ஒருவர், ஒரே நேரத்தில் மூன்று ஹெலிகொப்டர்களை 14 அடி தூரம் இழுத்துச் சென்று உலக சாதனை படைத்துள்ளார்.

ரஷ்ய ஹல்க் என்றழைக்கப்படும் செர்கி அகட்சன்யன் என்பவரே இவ்வாறு சாதனை படைத்துள்ளார்.

கசன் நகரில் உள்ள ஹெலிகொப்டர் தொழிற்சாலையில், வரிசையாக நிறுத்தப்பட்டிருந்த 3 ஹெலிகொப்டர்களை 25 வினாடிகளில் சுமார் 14 அடி தூரம் இழுத்துச் சென்றுள்ளார்.

மழையை பொருட்படுத்தாமல், 15 ஆயிரத்து 600 கிலோ எடையிலான இந்த 3 ஹெலிகொப்டர்களை இழுத்துச் சென்றவரை மக்கள் ஆரவாரம் செய்து உற்சாகப்படுத்தியுள்ளனர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொடிகாமம் கெற்பேலிப் பகுதியில் பெருமளவான கைக்குண்டுகள் மீட்பு




(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கெற்பேலிப் பகுதியில் உள்ள தனியார் காணியொன்றில் இருந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை பெருமளவான கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

காணி துப்புரவு நடவடிக்கையின் போது குறித்த கைக்குண்டுகள் அடையாளம் காணப்பட்ட நிலையில் அது தொடர்பாக கொடிகாமம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு வெடி பொருட்களை மீட்பதற்கான நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதன்போது 36 கைக்குண்டு கள் அடையாளம் காணப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)

## அனுமதிப்பத்திரமின்றி மாடுகளை ஏற்றிச் சென்ற ஒருவர் கைது



(நெளுக்குளம்)

வவுனியா ஓமந்தை பகுதியில் உரிய அனுமதிப்பத்திரங்கள் இன்றி அதிகளவான மாடுகளை வாகனத்தில் ஏற்றிச்சென்ற நபர் ஒருவரை ஓமந்தை பொலிஸார் கைது செய்துள்ளனர். நேற்று காலை கிளிநொச்சியிலிருந்து புத்தளம் நோக்கி மாடுகளை ஏற்றிச் சென்ற வாகனம் ஒன்றை ஓமந்தை பகுதியில் வழிமறித்த பொலிஸார் அதில் சோதனைகளை முன்னெடுத்தனர். இதன்போது அனுமதிப்பத்திரம் இன்றி அதிகளவான மாடுகள் ஏற்றி செல்லப்படுகின்றமை கண்டறியப்பட்டது. குறித்த வாகனத்தின் சாரதியை கைது செய்த பொலிஸார் மாடுகளையும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து சென்றனர்.. கைது செய்யப்பட்டவர் மேலதிக விசாரணைகளின் பின்னர் இன்றையதினம் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (4-6-299)



யாழ்.வயாவிளான் மத்திய கல்லூரியின் மணிவிழாவும் பணிநயப்பு விழாவும் கடந்த வெள்ளிக்கிழமை கல்லூரியின் பிர தான மண்டபத்தில் அதிபர் வே.த.ஜெயந்தன் தலைமையில் இடம்பெற்றது. (படம்- ரவிசாந்)



இலங்கையில் வன்முறை தீவிரவாதத்தை தடுப்பதற்கான சமூக குழுக்களின் திறன்களை மேம்படுத்துவதற்கான விசேட செயலமர்வு தேசிய சமாதான பேரவையின் பிரதிநிதியான அமில மதுஸங்க வின் பங்குபற்றுதலுடன் மன்னார் மாவட்ட தொடர்பாடலுக்கான மையத்தின் (CCT) இணைப்பாளர் ஜசோதரன் தலைமையில் மன்னார் தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றது. (படம் - ஜோசப்நயன்)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினெட்டு தினங்கள் இடம்பெறவுள்ளது.

இவ்வாலய மஹோற்சவத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (4-6)

## மன்னார் சிறுவர் பூங்காவீதியில் விபத்து- சிறுவன் படுகாயம்

(மன்னார்)

மன்னார் சிறுவர் பூங்கா பிரதான வீதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம் பெற்ற விபத்தில் சிறுவன் படுகாயம் அடைந்துள்ளான்.

குறித்த சிறுவன், அவருடைய தாய் உள்ளடங்கலாக மூவர் நேற்று காலை மன்னார் சிறுவர் பூங்கா பிரதான வீதியூடாக நடந்து சென்ற நிலையில் குறித்த வீதியூடாக அதிவேகமாக மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் ஒருவர் குறித்த சிறுவனை மோதிய தோடு, சிறிது தூரம் மோட்டார் சைக்கிளில் குறித்த சிறுவன் இழுத்துச் செல்லப்பட்டார்.

உடனடியாக குறித்த சிறுவனை அப்பகுதியால் சென்றவர்கள் மீட்டு மன்னார் மருத்துவமனையில், அனுமதித்தனர்.

விபத்தை ஏற்படுத்திய இளைஞர் அவ்விடத்தில் இருந்து சென்ற நிலையில் தற்போது மன்னார் மாவட்ட மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற்று வருவதாக தெரிய வருகின்றது.

குறித்த சிறுவன் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (4-6)

## ஸார்ப் நிறுவனத்தால் கண்ணிவெடி அகற்றும்பணி தொடர்ந்து முன்னெடுப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் சுதந்திரபுரம் ஆகிய பகுதியிலும் கிளிநொச்சி முகமாலை மற்றும் ஆனையிறவு ஆகிய பகுதிகளில் உள்ள இருபது இலட்சத்து எண்பத்திரெண்டாயிரத்து நூற்றுபத்து சதுரமீற்றர் பரப்பளவில் இருந்து முப்பத்து மூவாயிரத்து அறுநூற்று எழுபது அபாயகரமான வெடி பொருட்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது

மேற்படி நிறுவனத்தினால் நேற்று அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டது.

தொடர்ந்து இந்நிறுவனம் கண்ணிவெடியகற்றும் பணிகளை முகமாலை மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள சுதந்திரபுரம் பகுதியிலும் அம்பகாமம் பகுதியிலும் துரித கதியில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-6-315)

## எரிபொருள் கொள்கலன்களின் பூட்டு விசமிகளால் உடைப்பு

(தருமபுரம்)

விசுவமடு விவசாயிகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு. சொந்தமான எரிபொருள் நிலை யத்தின் கொள்கலன்களின்பூட்டு உடைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு குறித்த எரிபொருள் நிலையம் எரிபொருள் பற்றாக்குறை காரணத்தினால் மூடப்பட்டிருந்த நிலையில் இனந்தெரியாத விசமிகளால் எரிபொருள் கொள்கலன்களின் பூட்டு உடைக்கப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளன.

இச் சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து எரிபொருள் நிரப்பு நிலையத்தின் பாதுகாப்புக்காக இராணுவத்தினர் அழைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6-316)



யாழ்.இராட்சியத்தின் இறுதித் தமிழ்த்தேசிய சைவ மன்னன் 2 ஆம் சங்கிலிய மன்னனின் 403 ஆவது சிரார்த்த தின விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை நல்லூரில் சங்கிலிய மன்னன் நினைவு தினக் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

நல்லூர் முத்திரைச் சந்தியடியில் அமைந்துள்ள 2 ஆம் சங்கிலிய மன்னனின் உருவச் சிலையடியில் சங்கிலிய மன்னனின் நினைவு தினக் குழுவின் செயலாளர் என்.பி.ஸ்ரீந்திரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், யாழ்.மாநகரசபையின் பிரதி முதல்வர் து.ஈசன், ஆகியோர் சங்கிலிய மன்னனின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். (படங்கள்:-ரவிசாந்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை கல்வி முறையில் மாற்றம் கொண்டு வரப்படும்

## கல்வி அமைச்சர் சுசில்

(கொழும்பு)

**தற்போது நடைமுறையில் உள்ள தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞானம் சார்ந்த கல்வி முறை மாற்றியமைக்கப்படும் என புதிதாக கல்வி அமைச்சராக பொறுப்பேற்ற சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.**



அதன்படி, விரைவில் பாடசாலைக் கல்வி முறையில் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தேசிய பாடசாலைகளுக்கான அனுமதிக் கடிதம் வழங்குவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த கடந்த 21 ஆம் திகதி கடமைகளைப் பொறுப்பேற்றதன் பின்னர் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த அறிவுறுத்தல்களை வழங்கியதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (4)

### வெளிவிவகார அமைச்சிற்கு புதிய செயலாளர்

(கொழும்பு)

வெளியுறவு அமைச்சின் புதிய செயலாளராக அருணி விஜேவர்த்தன நியமிக்கப்படவுள்ளார்.

வெளியுறவு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இதற்கான முன்மொழிவை செய்த நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதற்கு ஒப்புதலை வழங்கியுள்ளார்.

அவர், வெளிநாட்டு சேவையில் பணியாற்றிய மூத்த அதிகாரி என்பதும் அந்த சேவையில் இருந்து முன்கூட்டியே ஓய்வு பெற்றுள்ளார்.

இந்த நிலையில் அவர் மீண்டும் சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளார். (4)

# அவுஸ்திரேலிய புதிய பிரதமருடன் இணைந்து பணியாற்ற விருப்பம்

## ஜனாதிபதி கோட்டா

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவின் புதிய பிரதமர் அந்தோனி அல்பானிஸ் உடன் இணைந்து பணியாற்ற எதிர்பார்த்துள்ளதாக இலங்கை அறிவித்துள்ளது. அவுஸ்திரேலியாவின் புதிய பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அந்தோனி அல்பானிஸ்க்கு வாழ்த்து தெரிவித்துள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இதனை குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை பேணுவதற்கும், அதனை மேலும் வலுப்படுத்துவதற்கும் புதிய பிரதமருடன் நெருக்கமாக பணியாற்ற எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (4)

### புதிதாக இறக்குமதி செய்யப்படவுள்ள

# 25 மோப்ப நாய்கள்

(கொழும்பு)

வெடிபொருட்கள் செயலிழப்பு உள்ளிட்ட கடமைகளுக்காக மோப்ப நாய்களை பெற்றுக் கொள்ளும் நோக்கில் உயர் ரகத்தைச் சேர்ந்த ஆண்கள் மற்றும் பெண்கள் என 25 நாய்களை வெளிநாடுகளில் இருந்து கொள்வனவு செய்வதற்கான விலை மனுக்கள் கோரப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. ஒரு நாய்க்குட்டியின் விலை சுமார் 10 இலட்சம் ரூபாய் என பொலிஸ் தலைமையகத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

காவல்துறை திணைக்களம் கடந்த 2019 ஆம் ஆண்டுக்கு பின்னர் மோப்ப நாய்கள் மற்றும் குதிரைகளை கொள்வனவு செய்யவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (4)

# கட்சி தாவியவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

## சஜித் பிரேமதாஸ

"எமது கட்சியின் தீர்மானத்தை மீறி அரசு பக்கம் சாய்ந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொண்ட ஹரீன் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். இருவரினதும் இந்தச் செயற்பாடு மிகவும் அருவருக்கத்தக்கது." என எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசின் நல்ல கருமங்களுக்கு ஐக்கிய மக்கள் சக்தி எதிரணியில் இருந்து கொண்டு ஆதரவு வழங்கும் எனவும், அமைச்சுப் பதவி களை ஏற்பதில்லை எனவும் நாம் ஏற்கனவே முடிவெடுத்திருந்தோம். இந்நிலையில், ஹரீன் பெர்னாண்டோவும், மனுஷ நாணயக்காரவும்எமது கட்சியின் முடிவை மீறிச் செயற்பட்டுள்ளதால் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (4)

# துப்பாக்கிச் சூடு ஒருவர் பலி

(கொழும்பு)

மாவத்தகம, பரகஹதெனிய பிரதேசத்தில் நேற்று முந்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

படுகாயமடைந்த நபர் மாவத்தகம மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் சிங்கதெனிய, பரகஹதெனிய பகுதியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சந்தேக நபர்களை கைது செய்ய மாவத்தகம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 320 | 300 | 350 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 210 | 220 | 240 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 250 | 300 |
| தக்காளி | 900 | 700 | 700 | 1000 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 160 | 120 |
| கோவா | 260 | 220 | 240 | 250 |
| கரட் | 180 | 350 | 400 | 400 |
| பூசணி | 150 | 100 | 100 | 120 |
| புடோல் | 160 | 240 | 140 | 280 |
| வாழைக்காய் | 50 | 40 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 150 | 200 | 220 | 200 |
| பாகற்காய் | 600 | 500 | 800 | 600 |
| வெண்டக்காய் | 200 | 180 | 160 | 400 |
| கருணைக் கிழங்கு | 180 | 160 | 160 | 200 |
| பயற்றங்காய் | 600 | 500 | 600 | 320 |
| லீக்ஸ் | 200 | 200 | 300 | 300 |
| பீற்றூட் | 350 | 380 | 200 | 400 |
| கறிமிளகாய் | 480 | 380 | 300 | 500 |
| முருங்கைக்காய் | 1200 | 1400 | 800 | 1200 |
| போஞ்சி | 450 | 650 | 400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 300 | 180 | 350 | 300 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 150 | 150 |
| தேசிக்காய் | 600 | 500 | 600 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 75 | 650 | 50-80 |
| இராசவள்ளி | 200 | 220 | 240 | 150 |
| வெங்காயப்பூ | -- | 600 | -- | -- |
| முள்ளங்கி | 120 | 200 | -- | 240 |
| பொன்னாங்காணி | 60 | 80 | -- | 50 |
| வல்லாரை | 20 | 20 | -- | 40 |
| ஈரப்பலா | -- | -- | -- | -- |

# எரிபொருள் நெருக்கடிக்கு விரைவில் தீர்வு

## பிரதமர் ரணில் நம்பிக்கை

(கொழும்பு)

எரிபொருள் நெருக்கடியை விரைவில் தீர்க்க முடியும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

எரிபொருள்களுடனான கப்பல்கள் சில நாட்டை வந்தடைந்துள்ளன. அத்துடன் மேலும் எரிபொருளை பெறுவதற்கான கொள்வனவு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிடைக்கப்பெறும் அதிகளவான தொகை எரிபொருள் மின் உற்பத்தி நிலையங்களுக்கு பயன்படுத்தப்படும் என்றும் பிரதமர் கூறினார்.

அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ள போதும் அவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (4)

# ரயில் விபத்து

## அறுவர் படுகாயம்

(கொழும்பு)

நீர்கொழும்பு பெரியமுல்லை புகையிரத கடவையில் இடம்பெற்ற விபத்தில் 6 பேர் காயமடைந்துள்ளனர்.

புகையிரதத்துடன் ஜீப் ஒன்று மோதுண்டதை அடுத்து காயமடைந்த 6 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## வேண்டவே வேண்டாம்!

(நேற்றைய தொடர்ச்சி)

வேலுவோ அன்று தன் மனைவியுடன் அவளது தாயாரின் வீட்டிற்குப் போக எண்ணி இருந்தான். அதைத் தள்ளிப் போடவா வேண்டும்! அட கடவுளே என்று எண்ணிக் கொண்டே மங்களம் கொடுத்த அரிசி, வெல்லம், எண்ணெய் முதலியவற்றை வாங்கிக் கொண்டு முதலில் தன் வீட்டிற்குச் சென்றான்.

அங்கு தன் மனைவியிடம் "இன்று நான், உன்னை அழைத்துக் கொண்டு உன் ஊருக்குப் போக முடியாது. எஜமானியம்மாள் ஒரு வேலை வைத்து விட்டாள். அதை இன்றைக்குள் செய்து முடிக்க முடியாது" என்றான். அவன் மனைவியும் "நான் எப்போதாவது என் பிறந்த வீட்டிற்குப் போகலாம் என்று நினைத்தால் கூடப் போக முடியவில்லை.



ஆனால் உன் எஜமானியின் மகள் மட்டும் தன் கணவனோடு மாதம் இரு முறை வந்து விடுகிறாள். அது அவள் அதிர்ஷ்டம். என் விதி இப்படி" என்று அலுத்துக் கொண்டாள். வேலு லட்சுமியின் வீட்டை அடைந்த போது அங்கு குழந்தைகளின் பெரிய கூட்டமே இருப்பதைக் கண்டான்.

வேலு லட்சுமியிடம் மங்களம் கூறியதைச் சொல்லவே. அவளோ "உன் எஜமானி ஒரு பைசா கூடக் கொடுக்காமல் வேலை மட்டும் வாங்கிக் கொள்கிறாள். இதுவரை ஐந்து தடவை வெல்லச் சீடை செய்து கொடுத்து விட்டேன் பைசா பெயரவில்லை. இன்று என்னால் ஒன்றும் செய்ய முடியாது என் அக்காவின் குழைந்தைகள் வேறு வந்திருக்கிறார்கள்" என்று சொன்னாள்.


அதைக் கேட்ட வேலு திகைத்தும் போனான். இந்த வெல்லச் சீடை விவகாரத்திற்கு ஒரேயடியாக முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்று அவன் எண்ணினான். அவனுக்கு மின்னல் போல ஒரு யோசனை தோன்றியது. அவன் தன் எண்ணத்தை லட்சுமியிடம் கூறி "இன்று இந்த வெல்ல சீடை சாக்கில் உனக்குப் பணமும் கிடைக்கும். இனி என் எஜமானிக்காக இதைச் செய்ய வேண்டியும் இராது" என்றான்.

லட்சுமியும் "அப்படியா? எப்படியாவது இந்தத் தொல்லை ஒழிந்தால் போதும். மாதத்தில் இரண்டு தடவை அடுப்படியில் மணிக்கணக்காய் இருந்து வெல்லச் சீடை தயாரிக்க வேண்டி இருக்கிறது. அதற்காகப் பணமாவது கிடைக்கிறதா? இல்லையே. சரி, என்ன செய்ய வேண்டும்" என்றுகேட்டாள்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## கிட்கிந்தா காண்டம்




காவல் மிக்கது இலங்கை; அதன் மதிலைக் கடந்து உள்ளே போவது எளிய செயலன்று; நான் சொன்னதைப் போலச் செய்யுங்கள் என்று கூறினான். "சடாயு தான் அரசனாய் இருந்து கழுகுகளை வழி நடத்தி வந்தான்.

அவன் மறைந்த தும் சிறகு இழந்து நான் செயலற்றுக் கிடந்தேன்; இப்பொழுது சிறகுகள் முளைத்து விட்டன; பழைய ஆற்றல் என்னிடம் வந்து விட்டது; நான் அப் பறவைகளை வழி நடத்திச் செல்லுகிறேன்" என்று கூறி விடை பெற்றுச் சென்றான் சம்பாதி.

**மகேந்திர மலையில் அனுமன்**

"புள்ளரசன் சம்பாதி பொய்யுரை பேசான்; உள்ளங்கை நெல்லிக் கனி போலத் தெள்ளத் தெளிய உள்ளதை எடுத்து உரைத்தான். இனி, நாம் உயிர் விடத் தேவை இல்லை; செய்ய வேண்டுவனவற்றைத் திறம்படச் செய்வதே தக்கது" என்று வானரர் தம் கருத்தைத் தெரிவித்தனர்.

"சூரியன் மகனா கிய சுக்கிரீவனையும் சுடர் விற்கை இராமனையும் தொழுது, உற்றது அறைந்தால் நம் கடமை முற்றுப் பெறும்; எனினும், நாமே ஆராய்தல் தெளி வான செயலாகும் என்ற முடிவிற்கு வந்து "நம் மால் கடலைக் கடக்க முடியுமா?" என்று ஆராய்ந்தனர். அவரவர் தம் ஆற்றலையும் திறமையையும் விரித்துரைக்க முயன்றனர்.

நீலன், "என்னால் கடலைக் கடக்க இயலாது" என்று தெளிவுபடக் கூறினான். அங்கதன் "அக்கரைக்குச் செல்லும் ஆற்றல் எனக்கு உண்டு; திரும்ப இக்கரைக்கு வரமுடியும் என்று கூற என்னால் முடியாது" என்றான்.

சாம்பவானும் தனக்கு ஆற்றல் இன்மையை வெளிப்படுத்தினான்; மேருமலை இடறத் தன்கால் முடம் பட்டு விட்டது; அனுமனே ஆற்றல் மிக்கவன், செல்லத் தக்கவன் அவனே என அவன் விரித்துக் கூறினான்.

"அனுமனுக்கு நீண்ட வாழ் நாள் வரம் உள்ளதால், [illegible] சாத்திர நூல்களின் நுட்பங்களை அவன் அறிந்தவன்; திறமையாய்ப் பேசும் சொல் வன்மை உடையவன் எமனும் அஞ்சும் சினமும் உடல் வலிமையும், சிவனைப் போலக் கடும்போர் செய்யும் திறமும் படைத்தவன் கடல் கடந்து திரும்பும் ஆற்றலும் அனுமனுக்குத்தான் உண்டு, இராமனும் அனுமனிடமே மிக்க நம்பிக்கை வைத்திருக்கிறான்;

"எண்ணிச் செயற்படும் நுண்ணறிவும், எதையும் சாதிக்கும் திண்மையும் அனுமனிடமே உள்ளன வயதாலும் சாம்பவானை விட மிகவும் இளயன் பேருருவம் எடுத்து மண்ணும் விண்ணும் வியாபிக்குப் பேராற்றல் அவனிடமே உள்ளது அமைச்சனுக்கு உரிய அறிவும் படைத்தலைவனுக்கு உரிய வீரமும், அறிஞர்க்கு உரிய சிந்தனையும் சிங்கம் போன்ற சீற்றமும், அஞ்சாமையும் உள்ளமையால் செலத்தக்கவன் அனுமனே" என்று சாம்பவான் கூறினான்.

இவ்வாறு சாம்பவான் புகழ்ந்து கூறி முடித்ததும் அறிவிற் சிறந்த அனுமன் சம்மதித்தான் உறுதியான நெஞ்சோடு தன் உள்ளக் கருத்தை உரைத்தான்.

"இலங்கையைத் தோண்டி எடுத்து வேரோடு இவ்விடம் கொண்டு வருக என்றாலும், அரக்கரை அழித்து அணங்கனைய சீதையைக் கொண்டு வருக என்றாலும் செய்து முடிப்பேன் கலங்க வேண்டா இது உறுதி" என்று கூறினான்.

"கடலை மிக எளிதில் கடப்பேன்" என்று சொல்லி அனுமன் பேருருவில் நின்றான்.

திருமா லின் திருவடி உலகளக் கத் தாவியது போல, அனுமன் கடலைக் கடக்கத்தானே யாகி நின்றான் மகேந்திரமலை மேல் நின்ற அனுமன், கூர்ம மாகிய ஆமைமேல் நின்ற மந்திரமலை போல் காட்சி அளித்தான்.

அனுமன் விண்ணளாவ நின்றான் மின்னலை உடைய மேகங்கள் அவன் காலில் படிந்து, அவன் காலுக்குக் கட்டிய வீரக் கழல் களைப் போல ஒளி செய்தன.

அவன் ஏறி நின்ற மகேந்திரமலை அண்டங்களைத் தாங்கும் பொன் மயமான தூணின் அடியில் இட்ட கல்லைப் போலக் காணப் பட்டது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல செயல் எப்போதும் உலகில் தனக்கு ஓர் இடம் உண்டாக்கிக்கொள்ளும்.
— எமர்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வடக்கு மாகாண ஆளுநருக்கு ஓர் அவசரக் கடிதம்

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாக ராஜா அவர்களுக்கு அன்பு வணக்கம்.

வடக்கு மாகாணத்தின் ஆளுநராக ஒரு தமிழர் இருக்க வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில், தாங்கள் வடக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளீர்கள்.

உங்களின் நியமனம் தமிழ் மக்களுக்கு விருப்பமாக அமைந்துள்ளது.

தமிழர் ஒருவர் ஆளுநராக இருக்கும் போது, வட பகுதி மக்கள் தங்களின் பிரச்சினைகளை எடுத்துக்கூறி அதற்குத் தீர்வு காண முடியும் என்ற வலுவான காரணத்துடன் தமிழர் ஒருவர் வடக்கு மாகாணத்தின் ஆளுநராக இருக்கும்போது, அவர் தமிழ் மக்களின் அவலத்தைப் புரிந்து கொண்டு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள்எழுச்சிக்கு உதவுவார் என்பதன் அடிப்படையிலும் தமிழர் ஒருவர் ஆளுநராக வரவேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

தவிர, தாங்கள் ஆளுநராகப் பதவியேற்ற கையோடு முன்வைத்த கருத்துக்கள் நம்பிக்கை தருவனவாகவும் இருந்தன.

ஆனால் தங்களின் தற்போதைய செயற்பாடுகள் தொடர்பில் ஊடகங்களில் வெளிவருகின்ற தகவல்கள் அதிர்ச்சி தருவதாய் உள்ளன.

அதாவது யாழ்ப்பாணம் ஆரியகுளம் விடயத்தில் நீங்கள், ஒரு மதம் சார்ந்து செயற்படுவதாக வடபகுதி மக்கள் கருதுகின்றனர்.

யாழ்ப்பாணம் ஆரியகுளம் புனரமைக்கப்பட்டமை ஒரு நல்ல விடயம்.

அது தொடர்பில் யார் எதிர்வாதம் புரிந்தாலும் அது தாமே தமக்கு வினையைத் தேடிக்கொள்வதாக அமையும்.

எனவே அதுபற்றி நாம் 'அலட்டிக் கொள்ளத் தேவையில்லை.

மாறாக, யாழ்ப்பாணம் ஆரியகுளம் மத சார்பற்ற ஓர் இடமாக – எந்த மத அடையாளங்களையும் பிரதிபலிப்பதாக இல்லாமல் பொது இடமாக அதனைப் பிரகடனப்படுத்துவது என யாழ்ப்பாணம் மாநகர சபை தெளிவான தீர்மானத்தை எடுத்துள்ளது.

இந்தநிலையில் ஆரியகுளத்தில் வெசாக் பண்டிகை தொடர்பிலான அலங்கார ஏற்பாடுகளைச் செய்வதற்கு அனுமதிக்க வேண்டுமெனத் தாங்கள் கோரிக்கை முன்வைத்ததான தகவல்கள் வடபகுதி மக்கள் மத்தியில் பேசுபடுபொருளாக உள்ளது.

உண்மையில், யாழ்ப்பாணம் ஆரியகுளம் சைவ சமயத்தின் சொத்து.

எனினும் யாழ்.மாநகர சபை எடுத்த தீர்மானத்துக்குப் பங்கம் ஏற்படாமல், பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் சைவ மக்கள் அமைதியாக உள்ளனர்.

எனினும் சைவ சமயத்தின் அடையாளமாக இருக்கக்கூடிய ஆரியகுளத்தை பொதுமையாக்குவதை எப்படி அனுமதிக்க முடியுமென்ற வாதம் சைவ சமயத்தவர்களிடம் இருக்கவே செய்கிறது.

நிலைமை இதுவாக இருக்கையில், வெசாக் பண்டிகை அலங்காரத்தை ஆரியகுளத்தில் அமைப்பதற்கு அனுமதிக்க வேண்டுமெனத் தாங்கள் கேட்பது தங்களின் நடுநிலைத்தன்மையை ஐயத்துக்குட்படுத்துவதாக அமையும்.

எனவே ஆட்சித் தரப்புக்கும் படைத் தரப்புக்குமாக உங்களின் நேர்மைத்தன்மையை இழக்காமல், தமிழ் மக்களுக்கு இருக்கக் கூடிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதாக தங்களின் பணி இருக்க வேண்டும் என்பதே நம் தாழ்மையான கோரிக்கை.

# போர்க் குற்றவாளிகளுக்கு இந்தியா தஞ்சம் அளிக்கக் கூடாது

## அன்புமணி ராமதாஸ் தெரிவிப்பு

(டில்லி)

இலங்கையின் முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு இந்தியா தஞ்சம் அளிக்கக் கூடாது என்று பா.ம.க இளைஞரணித் தலைவர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கையில் ஆட்சியாளர்களுக்கு எதிரான மக்கள் புரட்சி தீவிரமடைந்துள்ளது.

அடக்குமுறை, பொருளாதார சீரழிவுக்கு எதிரான மக்களின் கொந்தளிப்பை தாங்கிக்கொள்ள முடியாமல், திருகோணமலை கடற்படை தளத்தில் பதுங்கியிருந்த மகிந்த இந்தியாவுக்கு தப்பிச் சென்றுவிட்டதாக வெளியான செய்திகளை இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகம் மறுத்திருக்கிறது.

ஆனாலும் கடல் வழியாக அவர் இந்தியாவுக்கு வருவதற்கு அதிக வாய்ப்புகள் இருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

2009 ஈழப் போரில் ஒன்றரை இலட்சம் தமிழர்களை படுகொலை செய்தவர்கள் ராஜபக்ஷ சகோதரர்கள். அவர்களின் போர்க்குற்றங்களுக்கான ஆதாரங்களை ஐ.நா. மனித உரிமை ஆணையம் திரட்டியுள்ளது. அத்தகைய போர்க் குற்றவாளிகளுக்கு இந்தியா ஒருபோதும் தஞ்சம் அளிக்கக் கூடாது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4-6)

## இலங்கையின் பொருளாதார நெருக்கடி பச்சிளம் குழந்தையின் உயிரை பறித்தது

(நுவரெலியா)

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக பிறந்து இரண்டே நாளான பச்சிளம் குழந்தை உயிரிழந்த சம்பவம் நாட்டு மக்களை பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

ஹல்தும்முல்லை பகுதியில் இந்தச் துயர சம்பவம் பதிவாகி உள்ளது. தாய்ப்பால் சரிவர கிடைக்காத காரணத்தினால் குறித்த குழந்தையின் குருதியில் சீனி அளவு குறைந்து உடல் மஞ்சள் நிறமாக மாறத் தொடங்கியுள்ளது.

உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முயன்ற பெற்றோருக்கு சரியான நேரத்தில் போக்குவரத்து வசதி கிடைக்கவில்லை.

குழந்தையை வைத்தியசாலை எடுத்துச் செல்ல ஆட்டோ ஒன்றைத் தேட ஒரு மணிநேரத்துக்கும் அதிகமான நேரம் கழிந்துவிட்டது.

எனினும் இரத்தத்தில் சீனியின் அளவு கடுமையாக குறைவடைந்த காரணத்தினால் குழந்தை இறந்துவிட்டது. நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக ஆட்டோ ஒன்றைத் தேடிக் கொள்வதில் தாமதம் ஏற்பட்டது.

அந்த ஒருமணி நேரம் தாமதம் ஏற்படாது போயிருந்தால் குழந்தையை காப்பாற்றிக் கொள்ள முடிந்திருக்கும் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். (4-7)

## மர்மப் பொருள் வெடித்ததில் சிறுமி ஒருவர் படுகாயம்

(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்டம் பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிளாலிப் பகுதியில் மர்மப் பொருள் வெடித்ததில் சிறுமி ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

கிளாலி பாடசாலைக்கு அருகில் உள்ள காணி ஒன்றினை தாயாருடன் இணைந்து துப்புரவு செய்தபோதே குறித்த அனர்த்தம் இடம்பெற்றிருப்பதாக தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த சிறுமிக்கு 16 வயது எனவும், இன்று சாதாரணதர பரீட்சையில் தோற்றவுள்ள மாணவி எனவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

காயமடைந்த சிறுமி யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் பளைப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (4-7-100)

## சைக்கிள் வாங்க சேமித்த பணத்தை இலங்கைக்காக வழங்கிய சிறுமி

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் 3 ஆம் வகுப்பு படிக்கும் பாடசாலை மாணவி கோபிகா ஸ்ரீ என்பவர் சைக்கிள் வாங்குவதற்காக உண்டியலில் சேமித்த பணத்தை இலங்கை நிவாரண நிதிக்காக வழங்கியுள்ளார்.

இலங்கையில் தற்போது நிலவிவரும் கடும் பொருளாதார சூழ்நிலையில், கடும் சிரமத்திற்கு ஆளாகி உள்ள மக்களுக்கு தேவையான உதவிகளை செய்திட நன்கொடைகள் வழங்கிடுமாறும் முதல்வர் மு.க.ஸ்டாலின் தமிழக மக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இந்நிலையில் இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி மேலச்சத்திரம் பகுதியைச் சேர்ந்த பாக்கியம் - கவிதா தம்பதியரின் 8 வயது மகள் கோபிகா ஸ்ரீ சைக்கிள் வாங்குவதற்காக தான் உண்டியலில் சேர்த்து வைத்திருந்த ரூ.2,002 பணத்தை பரமக்குடி வருவாய் கோட்டாச்சியர் முருகனிடம் இலங்கையில் பொருளாதார நெருக்கடியால் கஷ்டப்படும் மக்களுக்காக வழங்கினார்.

அதனைப் பெற்றுக் கொண்ட கோட்டாச்சியர் மாணவிக்கு பாராட்டு தெரிவித்தார். (4-7)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## குரு தானாக வருவார்



"நான் பிறந்து வந்துள்ளேனே. என்னைப் பற்றி எதுவுமே தெரியவில்லையே. தெரிந்து கொள்ள வேண்டும்" என்று இவனாக நினைத்திருந்தாலும் சரி. அல்லது இவனுடைய பெற்றோர்கள் நினைத்து இருந்தாலும் சரி. அந்த எண்ணம் நிறைவேறாமல் தொடர்ந்து வந்திருந்தாலும் சரி, அது கட்டாயம் அதற்குரிய ஒரு குருவைத் தேடிக் கொடுத்துவிடும். வெளியிலே இருந்து வந்த ஒரு உருவத்தை குரு என்று சொல்வதை விட, ஒரு மனிதனுடைய கர்மா அவனுடைய action அவனுடைய சிந்தனை, அவனுடைய தெளிவு, அவனுடைய அறிவு வேகம் அவனுக்கு உயர்வு நாட்டத்தை கொடுத்துவிடுகின்றது. அதுவே குருவையும் கொண்டு வந்து கொடுத்துவிடும் காலத்திலே.

[illegible] சொல் இவைகளெல்லாம் சாதகனுடைய உள்ளுணர்வை தூண்டி விடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 70

பதிவுசெய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை, வாக்கெடுப்பு பிரிவுகள் மற்றும் வாக்கெடுப்பு மாவட்டங்கள் என்பன 2017 ஆம் ஆண்டின் போது பின்வருமாறு காணப்பட்டது. அட்டவணை 5.6 இல் இது விரிவாகக் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 5.6: தேர்தல் கட்டமைப்பு – 2017 – சப்பிரகமுவ மாகாணம்

| பிரதேசம் | பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்கள் | வாக்கெடுப்பு பிரிவுகள் | வாக்கெடுப்பு மாவட்டங்கள் |
|---|---|---|---|
| இரத்தினபுரி | 852,473 | 8 | 627 |
| கேகாலை | 669,570 | 9 | 573 |
| சப்பிரகமுவ | 1,522,043 | 17 | 1,200 |
| இலங்கை | 15,760,867 | 160 | 12,521 |




## இரத்தினபுரி மாவட்டம் பற்றிய தகவல்கள்

வடக்கு அகலாங்கு 6°13'க்கும் மற்றும்6°55' க்கும் இடையிலும் கிழக்கு நெட்டாங்கு80°10' மற்றும் 80°55' க்கும் இடையில் 3,275 சதுர கிலோ மீற்றர் பரப்பில் இரத்தினபுரி மாவட்டம் அமைந்துள்ளது.

மாகாணத்தின் மொத்த நிலப்பரப்பில் 66% இரத்தினபுரி மாவட்டம் ஆகும். நிலப்பரப்பு பிரதேசமாக 3,236 சதுர கிலோ மீற்றரும் 39 சதுர கிலோ மீற்றர் உள்ளக நீரப்பரப்பாகவும் உள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தின் உள்ளக நீரப் பரப்பு, மொத்தப் பரப்பின் 1.2% ஆகும். இந்த மாவட்டம் வடக்குத் திசையில் கேகாலை மற்றும் நுவரெனியா மாவட்டங்களையும் தெற்குத் திசையில் காலி, மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களையும் மேற்குத் திசையில் கொழும்பு மற்றும் களுத்துறை மாவட்டங்களையும் கிழக்குத் திசையில் பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களையும் எல்லைகளாகக் கொண்டு அமைந்துள்ளது.

2010 ஆம் ஆண்டில் மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் 752 சதுர கிலோ மீற்றர் அதாவது 23% வனப் பிரதேசமாக காணப்பட்டது. அயன மண்டல வலயத்திற்கு உரிய சிங்கராஜ வனத்தின் பெரும் பகுதி இரத்தினபுரி மாவட்டத்திற்கு உரியதாகும். இந்த மாவட்டத்தின் நிலப்பரப்பின் உயரங்கள் கடல் மட்டத்திற்குமேல் 9 மீற்றர் தொடக்கம் 2,230 மீற்றர் வரையில்வேறு படுகின்றது.

**மாகாணத்தின் மொத்த நிலப் பரப்பில் 66%இரத்தினபுரி மாவட்டம் ஆகும். நிலப்பரப்பு பிரதேசமாக 3,236 சதுர கிலோ மீற்றரும் 39 சதுர கிலோ மீற்றர் உள்ளக நீர்ப் பரப்பாகவும் உள்ளது. 2010 ஆம் ஆண்டில் மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் 752 சதுர கிலோ மீற்றர் அதாவது 23% வனப் பிர தேசமாக காணப்பட்டது.சிங்கராஜ வனத்தின் பெரும் பகுதி இரத்தினபுரி மாவட்டத்திற்கு உரியதாகும்.**

**இரத்தினபுரி மாவட்டம் வடக்குத் திசையில் கேகாலை மற்றும் நுவ ரெலியா மாவட்டங்களையும் தெற் குத் திசையில் காலி, மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட் டங்களையும் மேற்குத் திசையில் கொழும்பு மற்றும் களுத்துறை மாவட்டங்களையும் கிழக்குத் திசை யில் பதுளை மற்றும் மொனரா கலை மாவட்டங்களையும் எல்லை களாகக் கொண்டு அமைந்துள்ளது.**

சனத்தொகை மற்றும் வீடுகள் கணக்கெடுப்பின் (2012) பிரகாரம் சனத்தொகை 1,088,007 பேர்களாக காணப்பட்டனர். சதுர கிலோ மீற்றருக்கு சனத்தொகை அடர்த்தி 336 ஆகும்.

10 வயதுக்கு மேற்பட்ட சனத்தொகையினரின் எழுத்தறிவு 93.9% ஆகும். கொழும்பிலிருந்து 67 கிலோ மீற்றர் நேரடித் தூரத்தில் அமைந்துள்ள இரத்தினபுரி இம் மாவட்டத்தின் தலைநகரமாகும்.

2016 ஆம் ஆண்டு மாவட்ட வீதிக் கட்டமைப்பு 2,230 கி.மீ. ஆக காணப்பட்டது. இரத்தினபுரி மாவட்டத்தின் வேலை வாய்ப்பு முக்கியமாக விவசாயத் துறையில் (37%) அதைத்தொடர்ந்து சேவைத் துறையில் (35%) மற்றும் கைத் தொழிற் துறையில் (28%) ஆகும்.

## இரத்தினபுரி மாவட்டம் இன மற்றும் சமய அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு -2012

இன மற்றும் சமய அடிப்படையில் சனத் தொகை வேறுபட்டுள்ள விதம் அட்டவணை (S1) இல் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைய, மாவட்டத்தின் பெரும்பான்மை மக்கள் சிங்களவர்கள் ஆவர். அது மொத்த மாவட்ட சனத்தொகையில் 87.1% வீதமாகும்.

பௌத்தர்கள் 86.7% அதற்கு அடுத்து தமிழர்கள் (இந்தியத் தமிழர்கள் மற்றும் இலங்கை தமிழர்கள்) 10.7% மற்றும் இந்துக்கள் 9.4% , இலங்கைமுஸ்லிம்கள்(இஸ்லாமியர்கள் உட்பட) 2% ஆகும்.

## இரத்தினபுரி மாவட்டத்தின் மாகாண சபைத் தேர்தல் தொகுதிகளுக்கான எல்லை நிர்ணயம் (2017)

மாகாண சபைத் தேர்தல் முதன்மைச் சட்டத்தின் படி தேர்தல் ஆணையாளரால் , சப்ரகமுவ மாகாண சபையில் உள்ள இரத்தி னபுரி மாவட்டத்திற்கு 24 மாகாண சபை உறுப்பினர்கள் நிர்ணயிக்கப்பட்டனர்.

2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3 A (2) இன்படி இரத்தினபுரி மாவட்டம் 12 மாகாண சபை உறுப்பினர்களை தெரிவு செய்யக்கூடிய வகையில் அத்தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டி இருந்தது.

அட்டவணை (S1): இன மற்றும் மத அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு
இரத்தினபுரி மாவட்டம்

| இனம் | எண்ணிக்கை | வீதம் | சமயம் | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|---|---|---|
| சிங்களவர் | 947,811 | 87.1 | பௌத்தம் | 943,464 | 86.7 |
| இலங்கைத் தமிழர் | 54,437 | 5.0 | இந்து | 101,962 | 9.4 |
| இந்தியத் தமிழர் | 62,124 | 5.7 | இஸ்லாம் | 24,446 | 2.2 |
| இலங்கை முஸ்லிம் | 22,346 | 2.1 | கத்தோலிக்கம் | 10,844 | 1 |
| வேறு | 1,289 | 0.1 | வேறு கிருஸ்தவம் | 7,212 | 0.7 |
| | | | வேறு | 79 | - |
| மொத்தம் | 1,088,007 | | மொத்தம் | 1,088,007 | |

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவின்...



இந்தியாவினால் நன்கொடையாக வழங்கப்படும் இரண்டு பில்லியன் இலங்கை ரூபாய்க்கும் அதிக பெறுமதி வாய்ந்த மனிதாபிமான உத விப் பொருட்கள் இலங்கை அரசிடம் நேற்று கையளிக்கப்பட்டுள்ளது.

9,000 மெட்ரிக் தொன் அரிசி, 50 மெட்ரிக் தொன் பால்மா மற்றும் 25 மெட்ரிக் தொன்னுக்கும் அதிகமான மருந்துப் பொருட்கள் அடங்கிய கப்பல் நேற்றைய தினம் நாட்டை வந்தடைந்தது.

இந்த உதவிப் பொருட்களை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸிடம் கையளித்துள்ளார். (4,7)

### தன நிதானய

டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி 17.05.2022
சீட்டிழுக்கப்பட்ட திகதி 22.05.2022
சீட்டிழுப்பு இலக்கம் 793

ஆங்கில எழுத்து: B
வெற்றி இலக்கங்கள்: 03 10 65 75

தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

### மஹஜன சம்பத

திகதி 2022/05/22
சீட்டிழுப்பு இலக்கம் 4763

ஆங்கில எழுத்து: Z
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 0 4 8 7 0 6

தேசிய லொத்தர் சபை

### HANDAHANA

உத்தியோகபூர்வ முடிவுகள்

லொத்தர்சீட்டு அச்சிடப்பட்ட திகதி 2022.05.17
சீட்டிழுப்பு திகதி 22.05.2022
சீட்டிழுப்பு இலக்கம் 072

வெற்றி இலக்கினம்: மிதுனம்
வெற்றி இலக்கங்கள்: 05 08 23 43
மிதுனம்

தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி 22/05/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1111

வெற்றி எழுத்து: O
சுப்பர் இலக்க: 21
வெற்றி இலக்கங்கள்: 28 38 47 68

### கொவிசெத

சீட்டிழுப்பு இலக்கம் 3005
சீட்டிழுப்பு திகதி 22.05.2022
அச்சிடப்பட்டுள்ள திகதி 17.05.2022

ஆங்கில எழுத்து: T
வெற்றி இலக்கங்கள்: 06 10 16 78

தேசிய லொத்தர் சபை

### ஜாதிக சம்பத

அச்சிடப்பட்ட திகதி 18.05.2022
சீட்டிழுப்பு திகதி 22.05.2022
சீட்டிழுப்பு இலக்கம் 1247

வெற்றி இலக்கங்கள்: கடகம் 7 5 5 7 2 3

தேசிய லொத்தர் சபை

## எரிபொருள்...

ஆனால், போதிய எரிபொருள் இல்லாததால், சிலருக்கு எரிபொருளைப் பெறமுடியவில்லை.

இதனையடுத்து ஆத்திரமடைந்த கும்பல் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளரின் வீட்டிற்கு தீ வைத்துள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது.

சம்பவத்தின்போது வீட்டின் உரிமையாளர், அவரது மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகள் வீட்டினுள் இருந்துள்ளனர். உடனடியாக அப்பகுதி மக்கள் தீயை அணைத்தனர்.

இரண்டு பிள்ளைகளின் பாடசாலை உபகரணங்கள் மற்றும் புத்தகங்கள் உட்பட பல சொத்துக்கள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.(4,7)

## ஜூன் மாதம்...

கொழும்பில் இடம்பெற்ற 43 ஆவது படையணியின் ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் முறையான திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம் இன்மையால் நாடு முழுமையாக வங்குரோத்து நிலையை அடைந்து விட்டது.

இந்நிலையில் ஜூன் மாதம் நடுப்பகுதியில் நிச்சயமாக மீண்டும் ஒரு தாங்கிக் கொள்ள முடியாத பொருளாதார நெருக்கடி நிலைமை உருவாகும். அது நிச்சயமாக பாரியளவில் ஒரு கலவரமாக தோற்றம் பெறும். ஒரு கட்டத்திற்கு மேல் பொருளாதார நெருக்கடியை தாங்கிக்கொள்ள முடியாத மக்களால் எரிபொருள், எரிவாயு, மருந்துப் பொருட்கள் மற்றும் அத்தியாவசிய உணவுகளை பெற்றுக்கொள்வதற்காக இந்தக் கலவரம் உரு வாகும் என்பது உறுதி.

இதனால் இது கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற கலவரம்போல் இல்லாமல் அரசியல்வாதிகள் சொத்துக்கள் மட்டும் அன்றி நாட்டில் உள்ள அனைவரினதும் சொத்துக்களும் கொள்ளையிடப்படும் எனத் தெரிவித்தார். (4,7)

## யாழ்.,...

பானம்பற்றை, அல்வாய் வடக்கை சேர்ந்த பாக்கியநாதன் நதாவன் (வயது- 19) என்பவராவார்.

சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணையில் இளம் குடும்பஸ்தர் தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளார்.

இறந்தவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையான புளியம்பொக்கணை கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 42 வயதுடைய செல்லத்துரை புனிதராசா என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-7,60,316)

## பாதுகாப்பு...

நிலையில், அதனை இன்னுமொருவருக்கு கையளிக்க ஜனாதிபதி இணங்கியுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை புதிய அமைச்சரவை குறித்து பிரதமருடன் ஆராய்ந்த வேளை ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். (4-7)

# 15 மணிநேர மின்வெட்டு அடிப்படை ஆதாரமற்றது

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

(கொழும்பு)

எதிர்காலத்தில் 15 மணித்தியால மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என அரசியல்வாதிகள் அண்மையில் வெளியிட்ட கருத்து அடிப்படை ஆதாரமற்றது என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று பிற்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகள் யாருடைய ஆலோசனையின் பேரில் இவ்வாறான கருத்துக்களை வெளியிடுகின்றார்கள் எனத் தெரியவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். (4-7)

# 24 மணிநேர சேவையை முன்னெடுப்பதில் சிரமம்

## சுகாதார தொழிற்சங்கங்கள்

(கொழும்பு)

நாட்டில் நிலவும் நெருக்கடியான சூழ்நிலையில் 24 மணி நேர சுகாதார சேவையை முன்னெடுப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக சுகாதார தொழிற்சங்கங்கள் தெரிவிக்கின்றன.

சேவையில் நிலவும் பிரச்சினைகளுக்கு திட்டவட்டமான நடைமுறை தீர்வொன்றை வழங்குவதற்கு எந்தவொரு பொறுப்பான தரப்பினரும் முன்வராத நிலையில் எதிர்காலத்தில் சுகாதார சேவை தன்னெழுச்சியாக இடைநிறுத்தப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் தொழிற்சங்கங்கள் தெரிவிக்கின்றன. (4-7)

## அலரிமாளிகை...

இதற்கு முன்னர் உத்தரவிட்டிருந்ததுடன் அச் செலவு குறைப்பு தனக்கும் பொருந்தும் எனவும் பிரதமர் கூறியுள்ளார்.

தான் தனது தனிப்பட்ட சொந்த வீட்டில் குடியிருப்பதாகவும் கொழும்பு பிளவர் வீதியில் உள்ள பிரதமரின் செயலகத்தில் இருந்து கடமைகளை செய்ய முடிவு செய்துள்ளதாகவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதனிடையே நல்லாட்சி அரசாங்கம் ஆட்சியில் இருக்கும்போதும் ரணில் விக்கிரமசிங்க அலரிமாளிகையில் குடியிருக்கவில்லை எனவும் அரச பணிகளுக்காக மாத்திரம் அலரிமாளிகையை பயன்படுத்தி வந்தார் எனவும் பிரதமர் செயலகத்தின் மூத்த அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். (4,7)

## 21ஆவது...

அரசியலமைப்பின் 21ஆவது திருத்தம் இன்று அமைச்சரவை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படும் என நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இரட்டைக் குடியுரிமை உள்ளவர்கள் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்க முடியாத வகையில் திருத்தம் கொண்டு வரப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், தற்போதுள்ள சுயாதீன ஆணையங்களுடன் கூடுதலாக, தேசிய கணக்காய்வு அலுவலகம் மற்றும் கொள்முதல் ஆணைக்குழு ஆகியவை சுயாதீன ஆணைக்குழுவாக மாற்றப்படவுள்ளன.

தற்போதுள்ள ஆணைக்குழுக்களின் அதிகாரங்களை மேலும் வலுப்படுத்துவதுடன், அவற்றையும் சுயாதீனமாக ஆக்குவதே அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தத்தின் நோக்கம் என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் ஆளுநரை அரசியலமைப்பு சபையின் கீழ் கொண்டு வருவதற்கும் புதிய திருத்தம் முன்மொழிகிறது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (4,7)

## யாழில்...

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் நேற்றிரவு இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

அப்பகுதியில் வந்த காரும் மோட்டார் சைக்கிளும் மோதியே குறித்த விபத்து இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் மோட்டார் சைக்கிள் பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்து தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-7)

## 40 ஆயிரம்...

இலங்கையில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டைக் குறைப்பதற்காக இந்தியா மேலும் 40,000 மெட்ரிக் தொன் டீசலை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

இலங்கையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் டுவிட்டரில் இதனைத் தெரிவித்துள்ளது. (4-7)

## இலங்கையில்...

களை வழங்குகின்றன ஆனால் அது போதாது என்று விமர்சகர்கள் வாதிடுகின்றனர்.

உலகப் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவும், செழிப்பை மேம்படுத்தவும் அரசாங்கங்களுடன் இணைந்து பணியாற்றுவதே சர்வதேச நாணய நிதியத்தின் பங்கு ஆகும். எவ்வாறாயினும், இது சவாலானது. ஏனெனில் இந்த ஆண்டு உணவு விலைகள் அதிக உச்சத்தை எட்டியுள்ளன. அதேநேரத்தில் எண்ணெய் மற்றும் எரிவாயு விலைகளும் கடுமையாக உயர்ந்துள்ளன.


சரியான அரசாங்க ஆதரவின்றி இலங்கையில் இடம்பெறும் போராட்டங்கள் ஏனைய நாடுகளிலும் மீண்டும் இடம்பெறலாம் என அவர் கவலை தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி, விலைவாசி உயர்வு உக்கிரமடைந்து, கொடிய கலவரங்களுக்கு இட்டுச் சென்றது என மேலும் அவர் தெரிவித்தார். (4-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## நாகரட்ணம் விஸ்வநாதன்



பிறப்பு : 1935.11.23
இறப்பு : 2022.05.21

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட நாகரட்ணம் விஸ்வநாதன் அவர்கள் நேற்று முன்தினம் (21.05.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகரட்ணம் - கண்மணி தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்ற ஈஸ்வரியின் அன்புக் கணவரும் நாகநாதன், சற்குணவதி, கணேசலிங்கம், அருள்லிங்கம், காலஞ்சென்ற சிதம்பரநாதன், வைத்தியநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.05.2022) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (11476)

பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் :-
குடும்பத்தினர்

பரீட்சை மண்டபங்களுக்கு

# மாணவர்கள் உரிய நேரத்திற்கு வராவிட்டால் சலுகை வழங்குங்கள்

## கல்வி அமைச்சு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்

(கொழும்பு)

இன்று ஆரம்பமாகவுள்ள கல்வி பொதுத் தராதர சாதாரணதர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களை முன் கூட்டியே பரீட்சை மண்டபங்களுக்கு அனுப்பி வைக்குமாறு பரீட்சைகள் திணைக்களம் பெற்றோரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துரைத்த பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி தர்மசேன, பரீட்சார்த்திகள் இரண்டு மணி நேரத்திற்கு முன்னர் பரீட்சை நிலையங்களுக்கு சமுகமளிப்பதால் தேவையற்ற அசௌகரியங்களை தவிர்த்துக்கொள்ள முடியும் என தெரிவித்தார்.

எனினும், ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பரீட்சை மண்டபத்திற்கு பரீட்சார்த்திகளால் சமுகமளிக்க முடியவில்லையாயின், அதற்கு சலுகை வழங்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சை இடம்பெறும் தினங்களில் வீதியை மறித்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதை தவிர்க்குமாறு இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.(4-7)

# எரிவாயு ஏற்றிவந்த வாகனம் முற்றுகை



(வவுனியா)

குட்செட் வீதியில் எரிவாயு ஏற்றிவந்த வாகனம் ஒன்றினை முற்றுகையிட்ட மக்கள் எரிவாயு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று மதியம்இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா குட்செட் வீதியில் உள்ள எரிவாயு விற்பனை நிலையம் ஒன்றுக்கு எரிவாயுவினை வழங்கிவிட்டு அப்பகுதியில் உள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு வாகனத்தில் இருந்து 30 எரிவாயு கொள்கலன்கள் வழங்கப்பட்டன.

குறித்த பகுதியில் 100 இற்கும் மேற்பட்ட மக்கள் எரிவாயுவைப் பெறுவதற்காக வரிசையில் நின்றிருந்தனர். இதனையடுத்து தமக்கும் எரிவாயு வேண்டும் என தெரிவித்து எரிவாயு ஏற்றிவந்த வாகனத்தை வழிமறித்த மக்கள் எரிவாயு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன், வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பொலிஸார் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமக்களுடன் கலந்துரையாடினர். தமக்கும் எரிவாயுவை வழங்கிவிட்டு வாகனத்தை கொண்டுசெல்லுமாறு அவர்கள்விடாப் பிடியாக நின்றதையடுத்து அப்பகுதியில்நின்ற 110 பேருக்கு எரிவாயு வழங்கப்பட்டதுடன் எஞ்சிய வர்த்தக நிலையங்களுக்கு வழங்கப்பட இருந்த எரிவாயுவையும் குறித்த அப்பகுதியில் வைத்து மக்களை வரவழைத்து வழங்கியிருந்தனர்.

அங்குள்ளவர்களுக்கு எரிவாயு வழங்கப்பட்டதை அடுத்து மக்கள் முரண்படுவதனை கைவிட்டு வரிசையில்நின்று எரிவாயுவை பெற்றிருந்தனர்..

(4-7,250,299)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (11472)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (11474)

076 825 7716 (ஆகாஸ்)

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை



அசாதாரண சூழ்நிலையிலும் அனைத்து நாடுகளுக்கும் வழமைபோல் **100%** பாதுகாப்புடன் எமது சேவைகள் நடைபெறுகின்றது.

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 6113

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**
இல.01, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 3536



**அருள்**

| | | |
|---|---|---|
| இ.போ.ச டிப்போ எதிரில், பருத்தித்துறை. | இல.01, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி. | இல.01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி. |

தொ.பே:- 076 443 1576 (C-4354)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில் 20 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. ( நிலப்பரப்பு )**

- A32, A9 இணையும் பிரதான வீதியில் ( றவுண்டப் வோட் )
- A9 வீதியுடன் 6 பரப்பும்
- A9 பிரதான வீதியில் இருந்து 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 1 ½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையிலும் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் மருந்தகங்கள் அமைப்பதற்கும் ( பார்மசி )
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

தரகர் தேவையில்லை

பார்வையிடும் நேரம்
காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை

(11475)

077 814 7389, 077 241 7589 - ஜெயம்

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 21 பரப்புக் காணி விற்பனைக்கு**

நிலப்பரப்பு

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் (நிலப்பரப்பு)
- கைதடி சித்த போதனா வைத்தியசாலை, யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவபீடம் கிழக்கு எல்லைகள்.
- சமுர்த்தி வங்கி வடக்கு எல்லைகள்.
- கைதடி சந்தி 200 மீற்றர் தூரம்.
- வட மாகாண சபை 250 மீற்றர் தூரம்.
- மூன்று வழிப்பாதையுடன்
  01. A9 வீதி 100 மீற்றர் தூரம். (16 அடிப் பாதையுடன்)
  02. கைதடி கோப்பாய் வீதி 50 மீற்றர் தூரம் (20 அடிப் பாதையுடன்)
  03. சமுர்த்தி வங்கி அருகாமை வீதி 100 மீற்றர் தூரம். (16 அடிப் பாதையுடன்)
- சுற்றி நல்ல சூழலுடன் நல்ல தண்ணீர் நிலம்.
- செம்மண் காணி.

(11479)

பார்வையிடும் நேரம் காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை

076 658 3621, 077 288 0152, 077 623 4204

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு ( மேட்டுநிலம் )**

- பருத்தித்துறை வீதியில் இருந்து 1 ½ km தூரம்.
- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் அம்மன் கோவில் செல்லும் காபெட் வீதியில் பிரதான வீதியிலிருந்து 200m தூரம்.
- வீடு கட்டுவதற்கும் கால்நடை பண்ணை அமைப்பதற்கும் விவசாயம் செய்வதற்கும் உகந்த இடம்.
- அயலில் குடியிருப்புகள் உள்ள நல்ல சூழல்.
- 5 பரப்பாகவும் 10 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- புத்தூர் மட்டுவில் வீதியில் பிரதான நீர்த்தாங்கி அருகாமையில்.
- நல்ல தண்ணீரூற்று.

பார்வையிடும் நேரம்
காலை 8.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

1 பரப்பின் விலை 150, 000/=
ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் (11479)

074 291 3725, 074 291 3726, 074 291 3727

## உடனடி வேலை வாய்ப்பு

யாழ் நகரப்பகுதியில் உள்ள நிறுவனத்தில் சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு வேலைக்கு ஆள் தேவை (C-4360)



சம்பளம் - 30'000/-

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
0777-068-777


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.05.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.